லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

மலர்-09 இதழ்-04 செப்டம்பர் - 2020 மாத இதழ் விலை ₹ 10

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INDIA
ISSN : 2582-5275



## கொரோனாவுக்காக 2000 மினி கிளினிக்

makkalvisaranai



# வள்ளலார் அருளிய
# கல்ப மருந்து




## பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்





- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்



ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்

- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்





- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்

**போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்**



நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்

சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

**செல் : 99417 64922, 94441 80984**

# தலையங்கம்

“அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்”

## பொருளாதாரம் மீண்டெழுமா?

பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு கடுமையாக இருக்கும் என்பதைக் குறிப்பிடும் ரிசர்வ் வங்கி, அதற்கு முக்கியக் காரணமாக பொது முடக்கத்தால் ஏற்பட்டிருக்கும் நுகர்வுக் குறைவை குறிப்பிடுகிறது. பொருளாதாரம் எந்த அளவுக்குப் பின்னடைவைச் சந்திக்கும் என்பதைக் குறிப்பிடாமல் விட்டிருக்கிறது மத்திய வங்கி. அடுத்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், அதாவது நடப்பு நிதியாண்டின் நான்காவது காலாண்டில் பொருளாதார மந்தநிலை மாறக்கூடும் என்று அந்த அறிக்கை எதிர்பார்க்கிறது. அப்போது விலைவாசியும் சற்று குறையக்கூடும். ரிசர்வ் வங்கியின் அறிக்கை கூறுவதுபோல, மக்கள் மத்தியில் நுகர்வுக்கான உற்சாகம் இல்லாமல் இருப்பது உண்மை. நோய்த்தொற்றுப் பரவல் எப்போது முடிவுக்கு வரும், இயல்புநிலை எப்போது திரும்பும் என்று தெரியாத நிலையில் பொதுமக்கள் மிகவும் கவனமாக இருப்பதில் வியப்பில்லை. எதிலெல்லாம் முடியுமோ அதிலெல்லாம் செலவுகளைக் குறைப்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். வேலையிழப்பு, வருமான குறைவு போன்றவை பொதுமக்களை மிகவும் கவனமுடன் இருக்கத் தூண்டுகின்றன. பொதுமக்கள் முடிந்தவரை தங்களிடமிருக்கும் சேமிப்பைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறார்கள் என்பது அவர்களின் வங்கி வரவு - செலவுகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. மத்திய - மாநில அரசுகள் கடந்த சில மாதங்களில் நோய்த்தொற்றுக் கால நிவாரணமாக வழங்கிய நேரடி ரொக்க மானியத்தில், 40% பயனாளிகளால் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டு செலவழிக்கப்படவில்லை என்பது அதை உறுதிப் படுத்துகிறது. தனிநபர் மட்டுமல்ல, கார்ப்பரேட் நிறுவனங்களில் தொடங்கி சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் வரை உற்பத்தியாளர்களும் தங்களின் நடவடிக்கைகளை முழுமூச்சில் முடுக்கிவிடவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். தொழிற்சாலைகளில் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தாலும், வேலையிலிருந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பாததாலும் உற்பத்தியை முழுவீச்சில் நடத்த முடியவில்லை என்பது என்னவோ உண்மை. தொழில் நிறுவனங்களும் பொதுமக்களைப் போலவே, சற்று நிதானமாகவும், கவனமாகவும் செயல்பட நினைக்கின்றன. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய அரசு கார்ப்பரேட் வரியில் கணிசமான சலுகையை அறிவித்தது. அதிலிருந்து கிடைத்த ஆதாயத்தைப் பயன்படுத்தி வாங்கியிருந்த கடனை அடைப்பதிலும், வங்கிக் கையிருப்பை அதிகரிப்பதிலும் பெரும்பாலான நிறுவனங்கள் கவனம் செலுத்தின. கார்ப்பரேட் வரி குறைப்பு அறிவிக்கப்பட்டதன் மிக முக்கியமான நோக்கம், அந்த நிறுவனங்களில் முதலீடு அதிகரிக்கும் என்பதும், தொழிற்சாலை விரிவாக்கத்துக்கும், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கும் நிறுவனங்கள் முதலீடு செய்யும் என்பவைதான். அந்த எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது. புதிய முயற்சியில் ஈடுபட முதலீட்டாளர்கள் தயாராக இல்லை. கொவைட்-19 தாக்கம் குறையும்போது பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிக்க, தனியார் நுகர்வின் முக்கியத்துவத்தை அறிக்கை வலியுறுத்துகிறது. அதனால், பொருளாதார மீட்புக்கு போதுமான கடன் வசதிகள் மிக முக்கியம். அதை உறுதிப்படுத்த வங்கிகள் தவறுகின்றன. வாராக்கடன் குறித்த அச்சம் எல்லா வங்கிகளுக்கும், வங்கி மேலாளர்களுக்கும் இருப்பதுதான் அதற்கு மிக முக்கியமான காரணம். இந்த அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டு வங்கிகள் குறைந்த வட்டியில் தாராளமாகக் கடன் வழங்கினால் மட்டுமே பொருளாதாரம் மீண்டெழும்.

**- ஆசிரியர்**

# 960-க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்களை

## சூரியமின் சக்தியால் இயங்கும் நிலையங்களாக மாற்றியது இந்திய ரயில்வே

ரயில்வேக்குத் தேவையான மின்சாரம் முழுவதையும் தாங்களே உற்பத்தி செய்து கொள்வது என்ற நோக்கத்தை எட்டுவதற்கும், தேசிய சூரியசக்தி மின்சார உற்பத்தி இலக்குகளை எட்டுவதில் பங்களிப்பு செய்வதற்கும், இந்திய ரயில்வே நிர்வாகம் இதுவரையில் 960க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்களை சூரியசக்தி மின்சார மயமாக்கி யுள்ளது. 550 ரயில் நிலையங்களில் 198 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி செய்ய, சூரியசக்தி மின் உற்பத்தித் தகடுகளை மேற்கூரை களில் பொருத்த ஆர்டர்கள் தரப்பட்டுள்ளன.

முன்னணியில் உள்ள சூரியசக்தி மின் உற்பத்தி நிறுவனங்களுடன் இந்திய ரயில்வே நிர்வாகம் சமீபத்தில் ஒரு கலந்தாய்வை நடத்தியது குறிப்பிடத்தக்கது. 2030ஆம் ஆண்டுக்குள் 'கார்பன் உற்பத்தி இல்லாத ரயில்வேயாக' உருவாதல் என்ற பயணத்தில் அவர்களுடைய பங்களிப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் பற்றிய கருத்துகள் அப்போது பகிர்ந்து கொள்ளப்பட்டன. 2030 ஆண்டுக்குள் தனக்குத் தேவையான 33 பில்லியன் யூனிட்களுக்கும் மேற்பட்ட மின்சாரத்தை சூரியசக்தி மூலம் உற்பத்தி செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் இந்திய ரயில்வே எடுத்து வருகிறது.

தங்களுக்குச் சொந்தமான காலி இடங்களில் 2030க்குள் 20 கிகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் மெகா திட்டம் ஒன்றை இந்திய ரயில்வே உருவாக்கியுள்ளது. வாரணாசி, புதுடெல்லி, பழைய டெல்லி, ஜெய்ப்பூர், செகந்திராபாத், கொல்கத்தா, குவாஹாட்டி, ஹைதராபாத், ஹௌரா உள்ளிட்ட ரயில் நிலையங்கள் சூரியமின் சக்தி மயமாக்கப் பட்டுள்ளன.

இந்திய ரயில்வேயிடம் சுமார் 51 ஆயிரம் ஹெக்டர் அளவுக்கு காலி நிலங்கள் உள்ளன.



காலியாக உள்ள, ஆக்கிரமிப்பு இல்லாத ரயில்வே நிலங்களில் சூரியமின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க தனியாருக்கு ஆதரவு அளிக்க ரயில்வே நிர்வாகம் தயாராக உள்ளது. 2023 ஆம் ஆண்டுக்குள் ரயில்வே முழு அளவில் மின்சார மயமாக்கப்படும் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ரயில் பாதை மின்சாரத் தேவை முழுவதற்கும் சூரியசக்தி மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதில் இந்திய ரயில்வே உறுதியாக உள்ளது. முழுமையான 'பசுமை வழிப் போக்குவரத்து' சேவையை அளிக்கும் ரயில்வேயாக உருவெடுக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ரயில் நிலையங்களை சூரியசக்தி மின்சார மயமாக்க வேண்டும் மற்றும் ரயில்வேக்கு சொந்தமான காலி இடங்களில் புதுப்பிக்கத்தக்க ஆதார வளங்களின் அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி சமீபத்தில் அறிவுறுத்தியதன்படி இந்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

'கார்பன் உற்பத்தி இல்லாத ரயில்வே' என்ற நிலையை அடைவது என்ற லட்சியத்தை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்துவதாக இது இருக்கும். இதற்காக, தங்களின் காலி நிலங்களில் 2030 ஆம் ஆண்டுக்குள் 20 கிகாவாட் மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கும் மெகா திட்டத்தை இந்திய ரயில்வே உருவாக்கியுள்ளது.

இதன் தொடக்கமாக காலியாக உள்ள ரயில்வே நிலங்கள், ரயில் பாதையை ஒட்டிய ரயில்வே நிலங்களில் 3 கிகாவாட் அளவுக்கு சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்குவதற்கு, இந்திய ரயில்வேயின் பொதுத் துறை நிறுவனமான ரயில்வே மின்சார மேலாண்மை நிறுவனம் (REMCL) அழைப்பு விடுத்துள்ளது. குறைந்த கட்டணத்தில் ரயில்வேக்கு மின்சாரத்தை வழங்குவதுடன், ரயில் பாதையை ஒட்டிய இடங்களில் எல்லை அமைத்துக் கொள்வதால் ரயில்வே நிலங்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

– S. சுப்ரமணியன்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை ®

மக்களின் மனக்குமுறல் மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

மலர்-09 இதழ்-04 செப்டம்பர் - 2020

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V. அருணாச்சலம், S. அனந்த கிருஷ்ணன்**, M.A.,
**A. முருகையன்,**

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்: **வீ.சிவசங்கர்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்
V.தாயுமானவன், ரூபன் பிரசாந்த்

**முதன்மை செய்தியாளர்கள்**
A.N.சேதுராமன் சென்னை, M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
S.செந்தில்குமார், குருபாலகிருஷ்ணன், R.ஜெயா சென்னை
A.D.ராஜேந்திரன் விழுப்புரம், A.பாலகிருஷ்ணன் கோவை
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, S.மோகன்

**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ்
சச்சின், B.நாராயணசாமி, C. அன்பழகன்
G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், R. சத்தியமூர்த்தி
M.முருகன், M.சரவணன், V.முருகன் கோவை

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



நிர்வாக அலுவலகம்

**மக்கள் விசாரணை**

எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

## இந்திய ஒருமைப்பாடு, பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு எதிரான

# 118 செயலிகளுக்கு தடைவிதித்து மத்திய அரசு உத்தரவு

லடாக் எல்லையில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் இந்தியா-சீனா ராணுவ வீரர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் இந்திய வீரர்கள் 20 பேர் வீரமரணம் அடைந்தனர். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை தொடர்ந்து சீன பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

அதனைத் தொடர்ந்து இந்திய இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையில் இருப்பதாக கூறி டிக்-டாக் உள்பட 59 சீன செயலிகளுக்கு மத்திய அரசு தடைவிதித்தது. மேலும், பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படும் பல செயலிகள் தடை விதிக்கப்படும் எனவும், அது குறித்து பரிசீலித்து வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்தது.

இதனிடையே சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை அடிமையாக்கி வைத்திருக்கும் பப்ஜி எனப்படும் செல்போன் விளையாட்டு செயலிக்கு தடை விதிக்க வேண்டும் என பல்வேறு தரப்பிலும் தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் பப்ஜி, பப்ஜி மொபைல் லைட், வீசாட், பைடு, ரைஸ் ஆப் கிங்டம் உள்ளிட்ட 118 செயலிகளுக்கு மத்திய அரசு அதிரடி தடைவிதித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பை மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது. தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 69 ஏ இன் கீழ் இந்த தடை விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஆண்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். இயங்கு தளங்களில் கிடைக்கும் சில செல்போன் செயலிகள் தவறாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக அமைச்சகத்துக்கு ஏராளமான புகார்கள் வந்தன.




அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 118 செயலிகள் இந்தியாவின் இறையாண்மை ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் இந்த செயலிகள் மூலம் பயனர்களின் தரவுகள் மற்ற நாடுகளுக்கு பகிரப்படுவது தெரியவந்தது. அத்துடன் இந்த செயலிகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்று மத்திய சைபர் கிரைம் மையமும் பரிந்துரை செய்தது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'பப்ஜி' செயலிக்கு தடை விதிக்க வேண்டும் என்று சமீபத்தில் மறைந்த காங்கிரஸ் எம்.பி. எச்.வசந்தகுமார் கடந்த டிசம்பர் மாதம் 3-ந்தேதியன்று நாடாளுமன்றத்தில் பேசினார். அப்போது எச்.வசந்தகுமார், "வலைதள விளையாட்டுகள் பள்ளி குழந்தைகளின் கவனத்தை வேறு திசையில் கொண்டு செல்கின்றன என்று பெருவாரியான பெற்றோர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

உடல் பருமன், இருதய நோய், உளவியல் கோளாறுகள் போன்ற சுகாதார சீர்கேடுகள் இளைய சமுதாயத்தை பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. 100-க்கும் மேலான இளைஞர்களின் உயிரை 'புளூவேல்' வலைதள விளையாட்டு குடித்துள்ளது. ஆகவே 'புளூவேல்' மற்றும் 'பப்ஜி' போன்ற வலைதள விளையாட்டுகளை அரசு உடனடியாக தடை செய்யவேண்டும்" என்று பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

- K. ரமேஷ்குமார்




# விமான நிலையங்கள் ஆணையகத்தின் பெயரில் வெளியாகும் போலி வேலைவாய்ப்பு அறிவிப்புகளை நம்ப வேண்டாம்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

விமான நிலையங்கள் ஆணையகத்தின் பெயரில் போலியான வேலைவாய்ப்பு அறிவிப்புகள் அவ்வப்போது வெளியாகி வருகின்றன. இது தொடர்பாக எச்சரிக்கை செய்துள்ள விமான நிலையங்கள் ஆணையகத்தின் சென்னை அலுவலக துணைப் பொது மேலாளர் திரு எஸ் ரவி, இத்தகைய போலி விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய விமான நிலையங்கள் ஆணையகத்தின் வேலைவாய்ப்பு அறிவிப்புகள் முன்னணி நாளிதழ்களிலும், www.aai.aero என்ற ஆணையகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் மட்டுமே வெளியிடப்படும் என்றும் மேலும் கூறியுள்ளார். கைபேசியில், குறுஞ்செய்திகள், வாட்ஸ்அப் செய்திகள் வாயிலாகப் பெறப்படும் போலி வேலைவாய்ப்பு விளம்பரங்கள் குறித்து கவனமாக இருக்குமாறும், இத்தகைய விளம்பரங்களைப் பற்றி இந்திய விமான நிலையங்கள் ஆணையக அலுவலகத்திற்கோ, காவல் துறைக்கோ தெரிவிக்குமாறும், அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார். இத்தகைய போலி விளம்பரங்களை நம்பி பொதுமக்கள் ஏமாந்தால் அதற்கு ஆணையகம் பொறுப்பல்ல என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

– **ஆசிரியர்**

# ஜம்மு காஷ்மீர், லடாக்குடன் தமிழகம் சேர்கிறது




உலகின் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, வேற்றுமையில் ஒற்றுமை என்னும் தாரக மந்திரத்துடன் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. இதனால், கோவிட்-19 தொற்றை எதிர்த்து போராடுவதில் நாடு ஒன்றுபட்டு நிற்பதில் வியப்பு ஏதுமில்லை. இந்தச் சூழலில் விவசாயிகள் அபரிமிதமான மகசூலைக் குவித்து, உணவு பாதுகாப்பை உறுதி செய்து உயர்ந்து நிற்கின்றனர். இதற்காக மாண்புமிகு பிரதமரின் பாராட்டையும் அவர்கள் பெற்றுள்ளனர். பொது முடக்க காலத்தில், ஷ்ராமிக் ரயில்கள், நாடு முழுவதும், பரவியிருந்த லட்சக்கணக்கான புலம் பெயர்ந்த தொழிலாளர்களை அவர்களது சொந்த நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் அழைத்துச் சென்றுள்ளது. டெல்டா விவசாயிகளுக்கு பிற மாநிலங்களிலிருந்து ரயில்கள் மூலம் உரங்கள் திருச்சிக்கு கொண்டு வரப்பட்டன. இதேபோல உணவு தானியங்கள் பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. கலாச்சார வேற்றுமை, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மக்களுக்கு இடையே பரஸ்பர கலந்துரையாடல் மூலம் மகிழ்ச்சிகரமாக கொண்டாடப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். அப்போதுதான், நாடு முழுவதும் ஒருமித்த எழுச்சியை சாதாரண மனிதன் புரிந்து கொள்ள முடியும். ஒரே பாரதம், உன்னத பாரதம் 2015 அக்டோபர் 31-ம் தேதி, நவீன இந்தியாவை ஒருங்கிணைத்த, இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேலின் 140-வது பிறந்த நாள் அன்று, பிரதமரால் அறிவிக்கப்பட்டது. ஒரே பாரதம் உன்னத பாரதம் இயக்கத்தின்படி, ஒரு ஆண்டுக்கு ஒவ்வொரு மாநிலம், யூனியன் பிரதேசமும், மற்றொரு மாநிலம் / யூனியன் பிரதேசத்துடன் கலாச்சார ரீதியில் இணைக்கப் படும். அந்த மாநிலங்கள், தங்கள் மொழி, இலக்கியம், உணவு, திருவிழாக்கள், கலாச்சார விழாக்கள், சுற்றுலா போன்றவற்றில் நிகழ்ச்சி களை ஏற்பாடு செய்து அவற்றை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும்.

அந்த வகையில், தமிழகம், ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்குடன் கலாச்சார ரீதியில் இணைகிறது. இளைஞர்கள் கலாச்சாரத்தை தெரிந்து கொள்ளும் வகையில், அவர்களது கலாச்சார பரிமாற்றங்கள் நடைபெறும். வடக்கு எல்லையில் உள்ள ஜம்மு காஷ்மீர், தெற்கு கடைக்கோடியில் உள்ள தமிழகத்துடன் இந்த வகையில் இணைக்கப்பட்டுள்ளது. இது பன்முகப்பட்ட கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களை உண்மையிலேயே வெளிப் படுத்துவதாகும். இரண்டு மாநிலங்களுக்கும் இடையே, ஒற்றுமைகளை விட வேறுபாடுகளே அதிகம் உள்ளன. தட்ப,வெப்ப நிலையும் இரு மாநிலங்களிலும், ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டதாகும். குல்மார்க், ஸ்ரீநகர், சோனாமார்க் ஆகிய சுற்றுலா இடங்களை காஷ்மீர் கொண்டுள்ளது. ஊட்டி,



கொடைக்கானல், ஏற்காடு போன்ற ரம்மியமான இடங்களை தமிழகம் கொண்டுள்ளது. மனதை மயக்கும் ஆகார்பால், நூரி சாம்ப், ஸப்ராவன் ஆகிய அருவிகள் ஜம்மு காஷ்மீரில் உள்ளன. குற்றாலம், திற்பரப்பு, ஒகேனக்கல் ஆகிய அருவிகள் தமிழகத்தில் சுற்றுலா பயணிகளைக் கவரும் இடங்களாகத் திகழ்கின்றன. ஜம்மு காஷ்மீர், லடாக் ஆகியவை பனி சூழ்ந்து, பனிக்கட்டிகளுடன் தனித்துவமானவையாக உள்ளன. தமிழகம் நீண்ட கடற்கரைக்கு பெயர் பெற்றது. பருவநிலையைப் போல, இரு பகுதிகளிலும், ஆடை அணிவதலும் முற்றிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருப்பினும், இசை மற்றும் நடனத்தில் ஈடுபாடு கொள்வதில் இரு மாநிலங்களும் பொதுவானவையாகத் திகழ்கின்றன. தமிழகத்தில், பரதநாட்டியத்துடன் செழுமை வாய்ந்த பழமையான நடனக்கலை முதலிடத்தில் உள்ளது. சோழ, பல்லவ, பாண்டிய மன்னர்கள், நடனக் கலைக்கு கட்டியம் கூறும் வகையில் சிதம்பரம் நடராஜர் ஆலயம், தஞ்சை பிரகதீ-ஸ்வரர் ஆலயம் போன்ற கோயில்களை எழுப்பி அக்கலையை ஊக்குவித்தனர். கரகாட்டம், கோலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், தப்பாட்டம், கூத்து போன்ற நாட்டுப்புற நடனங்கள் தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் புகழ் பெற்றவை ஆகும்.

கண்ணைக்கவரும் வகையில் உடைகளை அணிந்து மக்கள் ஆடும் தும்ஹால் நடனம் போன்றவை ஜம்மு காஷ்மீரில் சிறப்பு வாய்ந்த தாகும். ஈத், ரம்ஜான் போன்ற பண்டிகைகளின் போது ரவுப் நடனம் ஆடப்படுவது வழக்கம். திருமணங்களின் போது பச்சா நக்மா என்னும் நடனத்தை சிறுவர்கள் ஆடுவார்கள். திருமண சடங்குகளுக்கு பின்னர், மணமகள் தனது வீட்டை விட்டு புறப்படும் போது, வூகி நிச்சான் என்னும் நடனம் நடைபெறும். காஷ்மீரத்து சால்வைகள், மிளகாய், காஷ்மீர் குங்குமப்பூ ஆகியவை தென்பகுதியில் பிரசித்தமானவை. தெற்கில் கிடைக்கும், மிளகு உள்ளிட்ட இதர மசாலா பொருட்களுக்கு வடக்கில் வரவேற்பு அதிகம். இரு மாநிலங்களிலும் அரிசி பொதுவான உணவாகவும், தேநீர் பொதுவான பானமாகவும் உள்ளன. தென்பகுதி மக்கள், ஜம்முவில் உள்ள வைஷ்ணவ தேவி, அமர்நாத் யாத்திரை மேற்கொள்வதும், அங்கிருந்து மக்கள் ராமேஸ்வரம், மதுரை, காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சை ஆகிய இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்வதும் வழக்கமானவையாகும். சூரிய உதயம், அஸ்தமனத்தைக் காண கன்னியாகுமரிக்கு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவது போல, ஸ்ரீநகர் தால் ஏரியில் படகு வீடுகளில் பயணிக்க சுற்றுலா பயணிகள் அங்கு செல்வதும் வழக்கம்.

கோவிட்-19 பரவலைத் தடுக்கவும், கட்டுப் படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை களால், மக்களின் போக்குவரத்து முடங்கி, சுற்றுலா தொழில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி யிருக்கிறது. மத்திய அரசின் மக்கள் தொடர்பு பிரிவுகளால், இதுதொடர்பான வெபினார்கள் நடத்தப்படுகின்றன. தமிழகம் மற்றும் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த பல்வேறு கல்லூரிகளில் கலாச்சார கருத்துகள் பரிமாறப்படுகின்றன. தமிழகம், ஜம்மு காஷ்மீரைப்போல, பஞ்சாப், ஆந்திராவுடனும், இமாச்சலப்பிரதேசம் கேரளா வுடனும், உத்தரகாண்ட், கர்நாடகத்துடனும், அரியானா, தெலங்கானாவுடனும், புதுச்சேரி, டாமன், டையூவுடனும், லட்சத்தீவு, அந்தமான் நிக்கோபார் தீவுகளுடனும் இணைக்கப்படு கின்றன. தற்போதைய சிக்கலில் இருந்தும், பின்னடைவில் இருந்தும், நாட்டை மீட்டு, மீள் எழுச்சி பெற்று பெருமையுடன் திகழவைக்க, கோவிட்-19 தொற்றுக்கு எதிராக அனைவரும் ஒன்றுபட்டு போராட வேண்டியது அவசியமாகும்.

**- வீ. சிவசங்கர்**



முனைவர் **ஆ.மவுரியன்** எழுதும்




தொடர் 34

# அன்னை மீனாம்பாள்

**பெண் விடுதலைக்காகவும், பட்டியலின மக்கள் விடுதலைக்காகவும் போராடுவததைத் தன் வாழ்நாள் லட்சியமாகக் கருதினார்**

ஏறத்தாழ 10 ஆண்டுக்காலம் மண்ணடியில் கூட்டுக் குடும்பத்தில் எங்களோடு தங்கி இருந்தார்” என்று சொல்கிறார் சுலோச்சனா.

1938 நவம்பர் 13 அன்று சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டாயில் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு கூடியது. அன்றுதான் ஈரோடு ராமசாமி சுயமரியாதை இயக்கப் பெண்களால் ‘பெரியார்’ என்று பட்டம் சூட்டப்பட்டார். இந்த மாநாட்டுக் கொடியை உயர்த்தி தீர்மானங்களைக் கொண்டுவந்தவர், அன்னை மீனாம்பாள். இறுதிவரை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை விடாது தாங்கிப் பிடித்திருந்தார் அன்னை.

அண்ணல் அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தொடங்கிய அனைத்திந்திய பட்டியலினங்களின் சம்மேளனத்தின் (ஏ.ஐ.சி.எஸ்.எஃப்) முதல் தலித் பெண் தலைவர் மீனாம்பாள்தான். தம்பதியிடம் அளப்பரிய அன்புகொண்டிருந்த அண்ணல் தன் கையால் சமைத்து இவர்களுக்கு உணவு பரிமாறியிருக்கிறார்.

களப்பணியாற்ற என்றுமே தயங்கியதில்லை மீனாம்பாள். ஜே.சி.ஆதிமூலத்தின் அழைப்பை ஏற்று கோலார் தங்கவயல் பகுதியில் தொழிலாளர்களின் தேவைகளை நேரடியாகக் களத்தில் கண்டறிந்தார்கள் சிவராஜ் தம்பதியர்.

1952-ம் ஆண்டு நடைபெற்ற முதல் மதராஸ் மாநில சட்டமன்றத் தேர்தலில் பட்டியலின சம்மேளனத்தின் சார்பில் மதுராந்தகம் தொகுதியில் போட்டியிட்ட மீனாம்பாள் தோல்வியைத் தழுவினார். 1967-ம் ஆண்டு தேர்தலில் ஆயிரம் விளக்கு தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். காங்கிரஸுக்கு எதிராக எதிர்ப்பலை இருந்த அந்தத் தேர்தலில் மீனாம்பாள் உட்பட பல காங்கிரஸ் தலைவர்கள் தோல்வியைத் தழுவினர்.

1964 செப்டம்பர் 29 அன்று கணவர் சிவராஜ் இறந்துபோக, குடும்பத்தைக் கவனித்துக்கொண்டே அரசியல் மற்றும் சமூகப்பணியாற்றினார் அன்னை. மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலை, ராயப்பேட்டை, மண்ணடி என்று வாடகை வீடுகளில்தான் குடும்பம் குடியிருந்தது. காந்தி நகரில் சொந்த வீடொன்றை பின்னாளில் வாங்கினார்கள். தொடர்ந்து சமூகப் பணியாற்றிய அன்னை, தன் இறுதி 20 ஆண்டுகளை பார்வையற்ற நிலையில் கழித்தார் என்று சொல்கிறார் மருமகள் சுலோச்சனா. “பார்வை சுத்தமாக இல்லை என்றாலும், வாசிப்பை மாமி விடவில்லை. தினமும் காலையில் செய்தித்தாளை யாரையாவது வாசிக்கச் சொல்லிக் கேட்டுவிடுவார்.



பார்வையற்ற நிலையில் கூட கூலிங் கிளாஸ் அணிந்துகொண்டு கூட்டங்களுக்குப் போய் பேசிவிடுவார்" என்று சொல்கிறார் இவர்.

தன் 88-வது வயதில் 1992 நவம்பர் 30 அன்று காலமானார் அன்னை மீனாம்பாள். எங்கோ ரங்கூனில் பிறந்து வளர்ந்து, சென்னைக்கு வாழ்க்கைப்பட்டு வந்தவர், மண்ணின் மகளாக ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களுக்காக தன் வாழ்நாளின் இறுதிவரைக் குரல்கொடுத்து வந்தார். இவரது நினைவாக அவர் வசித்த ராயப்பேட்டை ஆண்டி தெருவுக்கு 'மீனாம்பாள் சிவராஜ் தெரு' என்று பெயர் சூட்டினார் மறைந்த முதல்வர் ஜெயலலிதா.

ஒடுக்கப்பட்ட இனத்தில் பிறந்து, கட்டுப்பாடுகளை உடைத்து, இன்றளவும் தமிழகம் போற்றும் ஆளுமையாக நிமிர்ந்து நிற்கும் அன்னை மீனாம்பாள், கண்டிப்பாக மாநிலத்தின் 'அன்னை' தான்!

மீனாம்பாள் சிவராஜ் (அன்னை மீனாம்பாள் சிவராஜ்) 26 டிசம்பர், 1904 - 30 நவம்பர், 1992 பெண் விடுதலைக்காகவும், பட்டியலின மக்கள் விடுதலைக்காகவும் போராடுவததைத் தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு போராடி வென்ற பெண். இவர் இந்தி எதிர்ப்புப் போரின் முதல் படைத்தலைவியாக விளங்கியவர். தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் வல்லமை பெற்றவர். சென்னை மாநகராட்சியின் துணை மேயர். 1938 திசம்பரில் நீதிக்கட்சியின் மாநாடு 29,30,31 மூன்று நாட்கள் நடைபெற்றன.அந்த மாநாட்டில்தான் பெரியார் நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த மாநாட்டுப் பந்தலிலேயே மூன்றாம்நாள் இறுதியில் ஆதி திராவிடர் மாநாடு நடத்த மீனாம்பாள் சிவராஜ் நீதிக்கட்சி தலைவர்களிடம் ஒப்புதல் பெற்றிருந்தார்.மீனாம்பாள் தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் அம்பேத்கர் தலைமையை ஏற்று அகில இந்திய அளவில் மாநாடு நடத்துவது என்று தீர்மானித்தனர்

கவுன்சிலர் (6 ஆண்டுகள்)
கௌரவ மாகாண நீதிபதி (16 ஆண்டுகள்)
திரைப்பட தணிக்கை குழு உறுப்பினர் (6 ஆண்டுகள்)
சென்னை மாகாண ஆலோசணைக் குழு உறுப்பினர் (9 ஆண்டுகள்)
தொழிலாளர் ட்ரிப்யூனல் உறுப்பினர்
சென்னை நகர ரேஷன் ஆலோசனைக் குழு உறுப்பினர்
சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர் (13 ஆண்டுகள்)
போருக்குப்பின் புனரமைப்புக்குழு உறுப்பினர்
S.P.C.A உறுப்பினர்
நெல்லிக்குப்பம் பாரி கம்பெனி தொழிலாளர் தலைவர்
தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவு வங்கி இயக்குனர்
அண்ணாமலை பல்கலைக்கழக செனட் உறுப்பினர் (6 ஆண்டுகள்)
சென்னை கூட்டுறவு வீட்டு வசதி சங்க இயக்குனர்
விடுதலை அடைந்த கைதிகள் நலச்சங்க உறுப்பினர்
காந்தி நகர் மகளிர் சங்கத் தலைவர்
மகளிர் தொழிற் கூட்டுறவு குழுத்தலைவர் (6 ஆண்டுகள்)
சென்னை அரசு மருத்துவ மனைகளின் ஆலோசனைக் குழு உறுப்பினர்
அடையார் மதுரை மீனாட்சி மகளிர் விடுதி நடத்துனர்
லேடி வெலிங்டன் கல்லூரி தேர்வுக்குழு தலைவர்

**தொடரும்**

# உலகளாவிய புதுமை கண்டுபிடிப்பு தரவரிசை பட்டியலில் முதல் 50 நாடுகளில் இந்தியா இடம் பிடித்தது




உலகளாவிய புதுமை கண்டுபிடிப்பு தரவரிசை பட்டியல் 2020-ல், இந்தியாவை 4 இடங்கள் முன்னேறி 48வது இடத்தில் உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO)வைத்துள்ளது. கோவிட்-19 தொற்று நோய்க்கு மத்தியில், இது இந்தியாவை மேம்படுத்தும் செய்தியாக வந்துள்ளது. மேலும் நாட்டின் வலுவான ஆராய்ச்சி & மேம்பாடு சூழல் அமைப்புக்கு சான்றாக உள்ளது. இந்தியா 2015-ம் ஆண்டில் 81 வது இடத்தில் இருந்தது. 2019-ம் ஆண்டில் 52 வது இடத்தை பிடித்தது. உலகம் முழுவதும் மிகவும் புதுமையான வளர்ந்த நாடுகளின் அமைப்பில் இருப்பது குறிப்பிடத்தக்க சாதனை. கடந்த 5 ஆண்டுகளாக, இந்தியா தனது கண்டுபிடிப்பு தரவரிசையில் நிலையான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளதால், மத்திய மற்றும் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் 2019-ன் முன்னணி கண்டுபிடிப்பு சாதனை நாடுகளில் ஒன்றாக இந்தியாவை WIPO ஏற்றுக்கொண்டது.

மிக பரந்த அறிவு மூலதனம், துடிப்பான புதிய நிறுவனங்களின் சுற்றுச்சூழல் மற்றும் பொதுத்துறை மற்றும் தனியார் ஆராய்ச்சி நிறுவனங்களால் செய்யப்பட்ட அற்புதமான பணிகள் காரணமாக, உலகளாவிய கண்டுபிடிப்பு தரவரிசை பட்டியலில் இந்தியா நிலையான முன்னேற்றத்தை கண்டுள்ளது. நாட்டின் புதுமை கண்டுபிடிப்பு சூழலை மேம்படுத்தியதில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை, உயிரி தொழில்நுட்ப துறை, விண்வெளித்துறை ஆகியவை முக்கிய பங்காற்றியுள்ளன.

மின்சார வாகனங்கள், பயோடெக்னாலஜி, நானோ தொழில்நுட்பம், விண்வெளி, மாற்று எரிசக்தி ஆதாரங்கள் போன்ற பல்வேறு துறைகளில் கொள்கை தலைமையிலான கண்டு பிடிப்புகளைக் கொண்டுவருவதன் மூலம், தேசிய முயற்சிகளை மேம்படுத்துவதை உறுதி நிதி ஆயோக் அயராது உழைத்து வருகிறது. புதுமை கண்டுபிடிப்புகளை இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பரவலாக்குவதற்கான திசையில் முக்கிய நடவடிக்கையாக, நிதி ஆயோக் கடந்த ஆண்டு வெளியிட்ட இந்தியாவின் புதுமை கண்டுபிடிப்பு பட்டியல் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. உலகளாவிய தரவரிசை பட்டியலில் இந்தியாவின் நிலையை கண்காணிப்பதிலும் மதிப்பீடு செய்வதிலும் ஒரு நிலையான உந்துதலை, உலகளாவிய புதுமை கண்டுபிடிப்பு பட்டியல், நிதி ஆயோக் ஆகியவை வழங்கியுள்ளது.

உலக தரவரிசை பட்டியலில் மேலும் முன்னேறுவதில், இந்திய தனது முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும். அறிவியில் ரீதியான கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதில், உலகின் முன்னணி நாடுகளுடன் இந்தியா போட்டியிட்டால் மட்டும்தான், மாண்பு மிகு பிரதமர் விடுத்துள்ள தற்சார்பு இந்தியா அழைப்பை நனவாக்க முடியும். இந்தியா ஒரு முன்னுதாரண மாற்றத்தை கொண்டு வந்து அடுத்த உலகளாவிய புதுமை கண்டுபிடிப்பு தரவரிசை பட்டியலில் முதல் 25 நாடுகளில் இடம் பெறுவதை நோக்கமாக கொள்ள வேண்டிய நேரம் இது.

**- குருதேவ்**

# பூஜை போட்டது ஒரு இடம் அணை கட்டியது

காஞ்சிபுரம் பாலாற்றில் உள்ளாவூர் அருகே தடுப்பணை கட்டப்படும் என்று அறிவித்து பூஜை போட்டுவிட்டு, தற்போது பழையசீவரம் அருகே அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இடத்திலேயே தடுப்பணை அமைக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கூறியுள்ளனர்.

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலாற்றில் தடுப்பணை கட்ட வேண்டும்என்று கடந்த 60 ஆண்டுகளாக விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன்படி ஈசூர்-வள்ளிபுரம் அருகே ரூ.28 கோடியில் ஒரு தடுப்பணையும், கல்பாக்கம் அணுமின்நிலையத்தின் பங்களிப்புடன் வாயலூர் அருகே ரூ.32 கோடியில் 2-வது தடுப்பணையையும் தமிழக அரசு அமைத்தது.

காஞ்சிபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்டதால் இந்த மாவட்டத்தில் தடுப்பணை இல்லாத நிலை மீண்டும் ஏற்பட்டது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் தடுப்பணை அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று உள்ளாவூர் அருகே பாலாற்றில் தடுப்பணை கட்ட ரூ.42.16 கோடிநிதியை தமிழக அரசு ஒதுக்கியது. முதல்வர் பழனிசாமி காணொலிக் காட்சி மூலம் இந்த தடுப்பணைக்கான பூமி பூஜையை தொடங்கி வைத்தார். இந்நிலையில் ஏற்கெனவே அறிவித்த உள்ளாவூர் பகுதிக்கு பதில் பழையசீவரத்தில் தடுப்பணை அமைப்பதற்கான பணிகளை தொடங்க திட்டமிட்டுள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.





இதுகுறித்து பாலாறு பாதுகாப்பு கூட்டமைப்பைச் சேர்ந்த மோகன் என்பவர் கூறும்போது, “உள்ளாவூர் பகுதியில் ஆற்றின் அகலம் அதிகமாக உள்ளது. அகலம் அதிகமான பகுதிக்கு நிதி ஒதுக்கிவிட்டு ஆற்றில் அகலம் குறைவாக உள்ள பழையசீவரம் பகுதியில் தற்போது தடுப்பணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உள்ளாவூர் பகுதியில் தடுப்பணை அமைத்தால் பல்வேறு ஏரிகளுக்கு தண்ணீர் செல்லும். ஆனால், பழையசீவரம் பகுதியில் அமைப்பதால் இடைப்பட்ட பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் செல்லாது. உள்ளாவூர் பகுதியில்மணல் அதிகம் எடுக்கப்பட்டுவிட்டதால் அங்கு அமைக்க சாத்தியமில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அளவுக்கு அதிகமாக மணல் திருடியதை தடுக்காமல் விட்டது யார் தவறு? இது தொடர்பாக நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்துள்ளோம்” என்றார்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரி களிடம் கேட்டபோது, “குறிப்பிட்ட சில கிலோ மீட்டர் தூரத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு எந்த இடம் தடுப்பணை அமைக்க சாதகமாக உள்ளது என்று மண் பரிசோதனை செய்யப்படும். அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் இடத்தில்தான் தடுப்பணை அமைக்கப்படும். முதலமைச்சர் பங்கேற்ற தடுப்பணைக்கான பூஜை காணொலிக் காட்சி மூலம்தான் நடைபெற்றது. பொதுமக்கள் எளிதில் வந்து பங்கேற்கும் வகையில் அருகில் உள்ள இடம் பூஜைக்கு தேர்வு செய்யப்பட்டது. மண்பரிசோதனைஅடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட இடத்தில்தான் தடுப்பணை அமைக்கப்படுகிறது” என்றனர். **- கனகதுர்கா**

வேம்பு கற்பம்

# வள்ளலார் அருளிய

# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

**காயகற்பம் – ஒரு விளக்கம் :** தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் உயிரைப் பற்றியும், உடலைப் பற்றியும், இரண்டுக்குமிடையே உள்ள உறவு பற்றியும் தெரிந்து கொண்டார்கள். அதனால் மனிதன் நோயில்லாமல் வாழலாம்; துன்பம் இல்லாது வாழலாம்; அமைதியாக நட்புரிமையோடு அறிவுத் திறமையோடு வாழலாம்; இன்னும் மரணமே இல்லாமலும் வாழலாம் என்பதையும் தெரிந்து கொண்டார்கள். அதுமட்டுமல்ல. விரும்பியவர்களுக்கு அதற்கான பயிற்சிகளைக் கற்பித்து வந்தார்கள்.

வித்துவை உடலில் சுவற விட்டு, உடல் நலம் காத்து, மன வளம் காத்து, இளமை காத்து, எப்போதும் முதுமை இல்லாது இருக்கும் முறை ஒன்றையும். இரண்டாவதாக இரசவாதம் மூலமாக முப்பு என்ற முறையையும் கண்டு பிடித்தார்கள். இரசவாத முறை Philosopher Stone என்று மேல் நாட்டில் அனுபவத்திற்கு வந்தது இதை உண்டு விட்டால், முறையாக உடலை விட்டு உயிர் பிரியாது உடலை விட்டு உயிர் பிரிய வேண்டும் என்றால், உடலை விட்டு வித்து வெளியேற வேண்டும். வித்து உடையாமல்; உயிர் பிரியாமல் காத்துக் கொள்வதுதான் முப்பு என்ற மருந்து. அதைச் சாப்பிட்ட பிறகு ஒரு சிக்கல் எல்லாச் சித்தர்களுக்கும் வந்தது. உலகில் 200 வருடம் 300 வருடம் 500 வருடம் கூட வாழ்ந்து விட்டார்கள். எல்லாம் அனுபவித்தாகிவிட்டது. உலகை விட்டுப் போக வேண்டும் என்று நினைக்கிறார்கள் உயிர் போகவில்லை.

உயிரினங்களில் சில இயற்கையாகவே லம்பிகா யோகம் என்பதை செய்து வருகின்றன. பாம்பு, தவளை, உடும்பு போன்ற சில உயிரினங்கள் நாவை மடக்கி மேலே வைத்து அடக்கிக் கொள்ளும். அந்த மாதிரி நிலையில் பத்துப் பதினைந்து நாட்கள் அப்படியே இருக்கும். தேவையில்லாதபோது உயிரை விட்டு விடும். லம்பிகா யோகம் செய்தால் கொஞ்சம் கொஞ்சமாக உடம்பில் உள்ள உணர்வுகளெல்லாம் நின்றுவிடும். ஆனால் உயிர் போகாது. ஆனால் அத்தகைய ஜீவன்கள் உணவு இல்லாதபோது அந்த நிலையை அடைந்தன. உணவு கிடைக்கிற வாசனை வந்தவுடன், தானாக பழைய நிலைக்கு வந்துவிடும்.



மனிதர்களில் சிலர் லம்பிகா யோகத்தைச் செய்து, உயிர் போகாமல் தடுத்துக் கொண்டார்கள். அதனாலேயும் உடலைவிட்டு உயிர் பிரியாத ஒரு சிக்கல் ஏற்பட்டது. காரணம் மனிதன் லம்பிகா யோகம் செய்து மயக்க நிலையிலிருந்து திரும்பி வராமல தன்னை மறந்து விடுகிறான். உயிர் இருக்கிறது. ஆனால் உணர்வு தெரிவதே இல்லை. உடனே மற்றவர்கள், இவர் இறந்து விட்டார் என்று கருதி அடக்கம் செய்து விடுகிறார்கள். அதனால் அப்பயிற்சி நமக்குத் வேண்டியது இல்லை. தேவையும் இல்லை. அத்தகைய சிக்கல்கள் வராமலும் அதே சமயம் உடல் நலத்தைக் காத்து, ஆயுளைப் பெருக்கி, வாழும் காலம் வரைக்கும் நோயின்றி வாழ வைக்கக் கூடியதே காயகற்பக் கலையாகும்.

**புகல்பெறவே நூற்றாண்டின் வேம்பைப்பர்த்து**
**ஆமாப்ப பட்டையைத்தான் வெட்டிவந்து**
**அப்பனே நிழல்தனிலே யுலர்த்திபின்பு**
**காமப்பா யிடித்து நன்றாய்ச் சூரணமே செய்து**
**கரிசாலை மல்லிகையின் சாறு வார்த்து**

**நேமப்பா அஞ்சுதரம் பாவினையே செய்து**
**சிறப்பான வெருகடிதூள் கொண்டிடாயே**
**கொண்டிடவே யனுபான வகையைக்கேளு**

**மத்தித்து தேனதிலே குடிப்பாயே நாற்பதுநாள்**
**விண்டிடவே யந்திசந்தி கொள்ளுகொள்ளு**
**மெய்யெல்லாங் கருங்கல்லின் வைரம்போலாம்**
**துண்டிடவே நரை திரையு மேல்லாம்போகும்**
**சுக்கிலந்தான் மேலேறும் கீழோடாது**
**கண்டிடவே யாருதளம் வெளியே காணும்**
**காலனுமே அஞ்சிடுவான் காணுங்கானே**

நந்தீசர் சகலகலை ஞானம் -1000

சட்டை முனி மகா சித்தர் அருளிய ஒரு எளிய கற்ப மருந்தை, நூற்றாண்டு வேம்பு கற்பம்.

நாம் காயகற்ப மருந்துகளைத்தேடி எங்கேயும் காடு மலைகளில் அலைந்து திரியாமல் வீட்டிலிருந்தபடி சுலபமாக செய்து சாப்பிட்டு உடலைக் கற்ப தேகமாக மாற்றிக்கொள்ள நந்தீசர் பெருமான் அருளியுள்ளார்

தமிழ் நாட்டில் எங்கும் சாதாரணமாக காணக்கிடைக்கும் வேப்பமரத்தை நூறாண்டு சென்ற வயதான மரத்தை தேடி, அதன் பட்டையை வெட்டிவந்து, மேலே உள்ள கடினமான பகுதியை நீக்கி விட்டு, உள்ளே உள்ள வெண் சதைப் பகுதியை எடுத்து, நிழலிலேயே நன்கு காய வைத்து, உரலிலிட்டு இடித்து தூள் செய்து கொள்ளவும். இதில் வெண் கரிசலாங்கண்ணி சாறு, கொத்தமல்லி இலையை இடித்த சாறு இரண்டும் சமமாகக்கலந்து வேம்பு பட்டை தூளில் கலந்து அது முழுகும் அளவு சாறு விடவும். இதை வெயிலில் வைத்து காயவிடவும். இந்த மூலிகை சாறுகள் நன்கு வற்றியவுடன் மீண்டும் மேற்கண்ட சாறுகளை ஊற்றிக்கலந்து வெயிலில் காயவிடவும்.

இப்படி ஐந்து முறை செய்யவும். இதற்க்கு பாவனை என்று பெயர். இந்த முறையில் தயார் செய்த சூரணத்திற்கு “வேம்பு கற்பசூரணம்” என்று பெயர். இதனை பாட்டிலில் பதனம் செய்யவும். இதனை வெருகடியளவு என்பது ஐந்து விரல் கூட்டி எடுத்து (ஒரு டீ ஸ்பூன் அளவு



/ 6 கிராம் அளவு) தரமான தேனில் அல்லது சிறிய அளவு பனங்கல்கண்டுடன் கலந்து அந்தி சந்தி (காலை - மாலை) என நாற்பது நாள் உண்ணவும்.

இதனால் தேகம் வைரம் போல் இறுகி நாடி நரம்புகள் முறுக்கேறும், தசைகள் இறுகும், தலைமுடி நரை மாறும், பார்வைத்திறன் அதிகரிக்கும், உடல் இளவயது தோற்றம் பெறும், மற்றும் சுக்கிலம் எனப்படும் விந்து திடப்படும், உடல் உறவில் அதிகநேரம் நீடிக்கும் குண்டலினி யோகப்பயிற்சி செய்வோருக்கு பேரின்பசித்தி கிட்டும் மற்றும் ஞானத்தின் ஆறு நிலைகளையும் கண்டு உணரலாம் எனவும் இந்த “வேம்பு கற்பம்” உண்டவனைக் கண்டு காலன் என்ற எமன் அஞ்சுவான் என குறிப்பிடுகின்றார்.

இப்படி மகத்துவம் வாய்ந்த “வேம்பு கற்ப சூரணம்” செய்து உண்டு அனைவரும் பெரும் பயனடையலாமே!.

சட்டை முனி சித்தர், எளிய இந்த கற்பத்தை கடைபிடிக்க, சிறப்பாக பத்தியம் எதுவும் அவர் சொல்லவில்லை, ஆயினும், மருந்து உண்ணும் காலங்களில், கட்டுப்பாடான உணவு சிறந்த பலன்களைத்தரும்.

**குறிப்பு:** பொதுவாக, நூற்றாண்டு கடந்த வேப்பமரங்கள், திருக்கோவில்களில் மட்டும் அரிதாகக் காணப்படும், தயவு செய்து, அந்த மரங்களில், பட்டையை எடுக்கத்துணிய வேண்டாம், உடல் நலம் பெற, காய கற்பம் செய்ய வேப்பம் பட்டை எடுக்கப்போய், இறைவனின் சாபத்தை பெற்றுவிடாதீர்கள்!.

**- தொடரும்**

# தமிழ்நாடு கொரோனா ஊரடங்கால் பலன் இருந்ததா, இல்லையா?

கொரோனா பரவலை தடுப்பதற்காக கடந்த மார்ச் மாத மத்தியிலேயே தமிழ்நாட்டில் உள்ள மால்கள், திரையரங்குகள் ஆகியவை மூடப்பட்டன. பிறகு வழிபாட்டுத் தலங்களிலும் பொதுமக்களுக்கு அனுமதி நிறுத்தப்பட்டது. மார்ச் 24ஆம் தேதி முதல் பொதுப் போக்குவரத்து வசதிகள் நிறுத்தப் பட்டதோடு, முழு ஊரடங்கும் அமலுக்கு வந்தது.

ஊரடங்கு அமலுக்கு வந்தபோது இந்தியாவில் 468 பேருக்கு கொரோனா பாதிப்பு இருந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மார்ச் 23ஆம் தேதி மாலை வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் 12 பேருக்கு மட்டுமே நோய் பாதிப்பு இருந்தது.

ஆனால், மாநிலத்தில் கட்டுப்பாடுகள் முழுமையாக தளர்த்தப்படுவதற்கு முதல் நாளில் அதாவது ஆகஸ்ட் 31ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,28,041ஆக உயர்ந்திருந்தது. சிகிச்சையில் இருந்த ஆக்டிவ் நோயாளிகளின் எண்ணிக்கை 52,578ஆக இருந்தது.

ஆகவே, இந்த ஊரடங்கு கட்டுப்பாடுகள், அதனால் ஏற்பட்ட வருவாய் இழப்பு, வேலை இழப்பு ஆகியவற்றுக்கு எவ்வித பலனும் இல்லையா என்ற கேள்வி எழவே செய்கிறது.

"முழுமையான ஊரடங்கை அமல் படுத்தாமல் நோயைக் கட்டுப்படுத்தி யிருக்கலாமா என்ற கேள்வியை இப்போது கேட்பது எளிது. ஆனால், நோய் பரவ ஆரம்பித்த தருணத்தில் உலகம் முழுவதும் என்ன நடைமுறை இருந்ததோ அதைத்தான் இங்கு பின்பற்ற வேண்டியிருந்தது.

கோவிட்-19 என்பது உலகிற்குப் புதிய நோய். இந்த நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து இப்போதும் கற்றுக்கொண்டு வருகிறோம். ஆகவே, ஊரடங்கிற்கு பலனில்லையா என்ற கேள்விக்கு பதிலளிப்பது கடினம்" என்கிறார் தமிழக பொதுச் சுகாதாரத் துறையின் இயக்குநராக இருந்த டாக்டர் குழந்தைசாமி.



கொரோனா பரவல் துவங்கியபோது உலகில் மிகச் சில நாடுகளே முழுமையான ஊரடங்கு வேண்டாம் என்ற நிலைப்பாட்டை எடுத்தன. ஆனால், அம்மாதிரி நிலைப்பாட்டை எடுத்த நாடுகள் துவக்க நாட்களில் மிகப் பெரிய அளவில் உயிரிழப்புகளைச் சந்தித்தன.

"இத்தாலி, ஸ்பெயின், ஜெர்மனி, ஃப்ரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் முழுமையான ஊரடங்கு பின்பற்றப்படவில்லை. குறிப்பாக அமெரிக்காவில் ஊரடங்கே இல்லையென்று சொல்லலாம். இதன் காரணமாகவே அங்கு அந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கிறது. மற்ற நாடுகளில் துவக்கத்தில் உயிரிழப்புகள் வெகுவாக அதிகரித்தன என்பதையும் கவனிக்க வேண்டும்" என்கிறார் அவர்.

கோவிட் - 19 நோய்க்கு மருந்து இல்லை என்பதால், இந்நோய் உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தபோது மிகக் குறுகிய காலத்தில் பெரிய அளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதற்குப் பிறகே நோய்த்தடுப்பின் ஒரு பகுதியாக, மாநிலங்கள், நாடுகளின் எல்லைகளை மூடுவது, ஊரடங்கை அமல்படுத்துவது போன்றவை அரசுகளால் அறிவிக்கப்பட்டன.

தவிர, நோய்ப் பரவல் துவங்கிய காலகட்டத்தில் இந்த நடவடிக்கைகள் உலகளாவிய நடவடிக்கைகளாக, தேசம் தழுவிய நடவடிக்கைகளாக இருந்தன. ஆகவே ஊரடங்கிற்கு எதிராக முடிவெடுப்பது என்பது கிட்டத்தட்ட இயலாத ஒரு காரியமாகவே இருந்தது.

“நோய் பரவ ஆரம்பித்தபோது ஊரடங்கு தேவையில்லையென முடிவெடுத்திருந்தால், மக்கள் தொகை அதிகமுள்ள இந்தியா போன்ற நாடுகளில் எவ்விதமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என கூறுவது கடினம். உயிரிழப்புகள் அதிகரித்திருந்தால் நிலைமை மிக மோசமாகியிருக்கும்.

தவிர, இந்த ஊரடங்கின் காரணமாக குறிப்பிடத்தக்க சில நன்மைகள் இருந்ததை சிலர் சுட்டிக்காட்டுகிறார்கள். குறிப்பாக இந்த ஊரடங்கு காலகட்டத்தைப் பயன்படுத்தி பெரும்பாலான அரசுகள் தங்களுடைய பொது சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்தின. ஆகவே தளர்வு ஆரம்பித்தவுடன் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்தாலும், சிகிச்சை அளிக்க முடிந்தது.

“இந்த ஊரடங்கினால் நன்மைகளே இல்லையெனச் சொல்ல முடியாது. ஊரடங்கு இருந்திருக்காவிட்டால் மே மாதத்திலேயே 30-40 லட்சம் பேருக்கு நோய் பரவி, பெரிய அளவில் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கும். ஊரடங்கின் மூலம் அதைத் தடுத்திருக்கிறோம். தவிர, மருத்துவக் கட்டமைப்புக்கு தன்னைத் தயார் செய்துகொள்வதற்கான நேரமும் கிடைத்தது. ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஊரடங்கை அமல்படுத்தியவிதமும், நேரமும் அறிவியல் சார்ந்து இருக்கவில்லை” என்கிறார் சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத்.

இந்தியா போன்ற இவ்வளவு பெரிய நாட்டில் ஒரே நேரத்தில் நாடு முழுவதும் ஊரடங்கை அறிவித்தது தவறு என்கிறார் ரவீந்திரநாத். சீனாவுக்கு வெளியே நோய் பரவ ஆரம்பித்தவுடனேயே இந்த ஊரடங்கை அமல்படுத்தியிருக்க வேண்டும். ஆரம்பத்தில் சீனாவின் வூஹானிலிருந்து வரும் விமானங்களை



மட்டுமே இந்தியா தடை செய்தது; ஆனால், இந்தியாவில் நோய் பெரிதும் பரவியது ஐரோப்பிய நாடுகளில் இருந்துவந்த விமானங்களால்தான். ஆகவே அவற்றையும் தடைசெய்திருக்க வேண்டும் என்கிறார் ரவீந்திரநாத். ஜனவரியிலேயே நோய் பரவல் ஆரம்பித்துவிட்டதால், அப்போதிருந்தே வெளிநாட்டிலிருந்து வருபவர்களை தனிமைப்படுத்தியிருக்க வேண்டும்.

முதல் இரண்டு ஊரடங்கு காலகட்டத்தின்போது போதிய அளவுக்கு சோதனைகள் செய்யப்படவில்லை; அந்த அளவுக்கு சோதனை கிட்கள் இந்தியாவில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டும் ரவீந்திரநாத் இதனால் மிக முக்கியமான காலகட்டம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்படவில்லை.

அதேபோல நோய் உச்சத்தில் இருக்கும்போது தளர்வுகளைதுவங்கியிருப்பதும் சரியல்ல. “அந்த நேரத்தில் வெளிமாநில தொழிலாளர்களை தங்கள் சொந்த ஊருக்குப் போக அனுமதித்தார்கள். அவர்கள் பெருநகரங் களிலிருந்து தத்தம் கிராமங்களில் நோய்கள் பரவ காரணமாக அமைந்தார்கள்”. ஆனால், ஊரடங்கு இல்லாவிட்டால் நிலைமை மிக மோசமாகியிருக்கும் என்பதை அவர் ஏற்கிறார்.

“தளர்வுகளை முன்கூட்டியே துவங்கியிருக்கலாம் என இப்போது நாம் சொல்லலாம். ஆனால் அது விவாதத்திற்குரியது. இனிவரும் காலகட்டத்தில் நோய்ப் பரவலை மேலும் கட்டுப்படுத்துவது குறித்துதான் இப்போது நாம் சிந்திக்க வேண்டும்” என்கிறார் குழந்தைசாமி.

எல்லா கட்டடங்களையும் காற்றோட்டம் கொண்ட கட்டடங்களாக மாற்றுவது, பொது இடங்களில் கை கழுவுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவது, தொற்றுக்கு எளிதில் ஆளாகக்கூடியவர்களை பாதுகாப்பாக வைப்பது ஆகியவற்றை செயல்படுத்த வேண்டும்.

கொரோனாவைத் தடுப்பதற்கான முதல் ஊரடங்கு இந்தியாவில் மார்ச் 25ஆம் தேதி முதல் 21 நாட்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகு ஏப்ரல் 14 முதல் மே 3ஆம் தேதிவரை இந்த ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. இதற்குப் பிறகு ஜூன் 1ஆம் தேதி முதல் தளர்வுகள் அறிவிக்கப்பட்டன.

- M. சத்தியராஜ்


# சிந்தனை முத்துக்கள்


நம்பாதே
காணாத காட்சியை
உளறாதே
கேளாத செய்தியை


பேங்கில் இருந்து போன் பண்றேன்னு சொல்லி ATM கார்டு நம்பர் கேட்டா சொல்லிடாதீங்க..,
OTP நம்பரும் கேப்பாங்க.., அடிச்சு கேட்டா கூட சொல்லிடாதீங்க..,
அப்படியுமா கேப்பாங்க??
பொதுநலன் கருதி
ஈரோடு மாவட்ட காவல்துறை


காலி பாக்கெட்டும் பசித்த வயிறும்
சொல்லிக்கொடுக்கும் பாடத்தை
எந்த பள்ளியும் கற்பிக்க
முடியாது...!


ஒருவர் நம்மை சிரிக்க வைப்பதனால்
அவர் கோமாளியும் இல்லை...
ஒருவரை எளிதில் கேலி செய்வதனால்
நாம் மேதாவியும் இல்லை...


ஒரு மனிதனின் தோல்விக்கு
பயம் தான் முக்கிய காரணம்
அதனால் இனிமேல் நீங்க யாரும்
கண்ணாடியை பார்க்காதீங்க😀😀😀


எதுக்குங்க பையனை அடிக்குறீங்க.
ஏதோ பாவம்னு பாஸ் பண்ணி
விட்டிருக்காறுங்க.
இந்த நாய் குடிச்சுட்டு வந்து
என் கிட்டையே.
"I AM DEGREE HOLDER"னு கை
கொடுக்குறான்டி.


நாம எவ்வளவு தான்
விரட்டி விரட்டி
அடித்தாலும்.
மறுபடியும் பாசமா
நம்ம கிட்டயே
திரும்பி வர ஒரே
ஜீவன்
கொசு மட்டுமே...!


கண்ணாடி பார்க்க கூட நேரம் இல்லாமல்
உழைத்த தந்தை தன் மகனின் முகத்தில்
தன் இளமையை ரசித்திருப்பார்
இப்படி தான் நாமும் இருந்தோம் என்று


வாசனை சுவை தெரியவில்லை என்றால்
கொரோனா அறிகுறியாக இருக்கலாம்
கல்யாணம் ஆனதுல இருந்து
அப்படி தான் இருக்கு சார்...

ஒன்பது ஓட்டைக் குள்ளே ஒருதுளிக் காற்றை வைத்து சந்தையில் விற்றுவிட்டான் ஒருவன். அவன் தடம் தெரிந்தால் அவன்தான் இறைவன்...!



- கவிஞர் கண்ணதாசன்



























# புதிய கல்விக் கொள்கை: உயர்கல்வியில் தமிழ் வழியில் படிக்கும் வாய்ப்பு என்னவாகும்?




பள்ளிக் கல்வியில் தாய்மொழிக் கல்வி பற்றி குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு உயர்கல்வியில் இந்திய மாணவர்களின் தாய்மொழி அல்லது உள்ளூர் மொழி எவ்வாறு பயன்படுத்தப்படும் அல்லது ஊக்குவிக்கப்படும் என்பது இதில் விவரிக்கப்படவில்லை. இது குறித்த விவரங் களைப் பார்க்கும் முன்னர் தாய்மொழிக் கல்வி மற்றும் மொழிப்பாடங்கள் குறித்து புதிய கல்விக் கொள்கையில் உள்ள சில முக்கிய தகவல்களைப் பார்ப்போம்.

**தாய்மொழிக் கல்வி கட்டாயமா?:** ஊடகச் செய்திகள் சிலவற்றில் குறிப்பிடுவதுபோல ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி அல்லது உள்ளூர் மொழி கட்டாயப் பயிற்று மொழியாக இருக்கும் என்று புதிய கல்விக் கொள்கையில் குறிப்பிடப்படவில்லை. எங்கெல்லாம் சாத்தியமாகுமோ அங்கெல்லாம் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரை, இயன்றவரை எட்டாம் வகுப்பு வரை உள்ளூர் மொழி அல்லது தாய் மொழி அல்லது வட்டார மொழி வாயிலாக கல்வி கற்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இரண்டிலுமே இது பின்பற்றப்படும் என்று புதிய கல்விக் கொள்கை கூறுகிறது.

மேற்கண்ட மொழிகளிலேயே பாடப் புத்தகங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும். அவ்வாறு பாடப்புத்தகங்கள் அந்த மொழிகளில் கிடைக்காவிட்டால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இடையே நிகழும் பரிமாற்றம் உள்ளூர் மொழி அல்லது தாய் மொழியிலேயே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் இரண்டு மொழிகளை பயன்படுத்தி பாடம் நடத்த ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்றும் புதிய கல்வி கொள்கை கூறுகிறது.

**மும்மொழிக் கொள்கை:** இரண்டு முதல் எட்டு வயது வரையிலான காலகட்டத்தில் மொழிகளை குழந்தைகள் வேகமாக கற்றுக் கொள்ளும் திறனுடன் இருப்பார்கள் என்பதாலும், பன்மொழி அறிவு இளம் மாணவர்களுக்கு அதிகமான அறிவுசார் பயனளிக்கும் என்பதாலும், தாய்மொழி அல்லாமல் வேறு இரு மொழிகளிலும் எழுதவும் படிக்கவும் மூன்றாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் உள்ள மாணவர்கள் பயிற்றுவிக்கப் படுவார்கள் என்றும் புதிய கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிராந்திய மொழிகளை கற்பிக்கும் ஆசிரியர்களை உருவாக்குவதில் மாநில மற்றும் மத்திய அரசுகள் முயற்சி எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மொழி அல்லது பிராந்திய மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆறாம் வகுப்பு முதல் அறிவியல் மற்றும் கணிதவியல் பாடங்கள் இரண்டு மொழிகளில் பயிற்றுவிக்கப்படும் என்றும் அதன்மூலம் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் பொழுது அவர்கள் மேற்கண்ட பாடங்கள் குறித்து அவர்களின் உள்ளூர் மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டிலுமே பேச முடியும் என்றும் புதிய கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வியில் சமஸ்கிருத்துடன், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா, பாலி, பாரசீகம் பிரகிருதி உள்ளிட்ட மொழிகள் விருப்ப மொழிகளாக இருக்கும். மேல்நிலைக் கல்வி



பயிலும் மாணவர்களுக்கு இந்திய மொழிகள், ஆங்கிலம் மட்டுமல்லாது சீன மொழி, பிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பானிய மொழி, கொரிய மொழி உள்ளிட்ட வெளி நாட்டு மொழிகளும் விருப்ப மொழிகளாக விருப்பப் பாடங்களாக இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர் கல்வியைப் பொருத்தவரை 2018ஆம் ஆண்டில் 26.3 சதவிகிதமாக இருந்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் (அதாவது பள்ளிக் கல்வியை முடிக்கும் மாணவர்களில் உயர்கல்வியில் சேருவோர் விகிதம்) 2030ஆம் ஆண்டில் 50 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும் எனும் இலக்கை கொண்டுள்ளது இந்த புதிய கல்விக் கொள்கை.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை பல்துறை நிபுணத்துவம் பெற்றவையாக மேம்படுத்துவது, மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை, சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் இயங்க அனுமதிப்பது, அந்த கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அனுமதி, தன்னாட்சி அதிகாரங்கள் உள்ளிட்டவை குறித்துப் பேசும் இந்த புதிய கல்விக் கொள்கையில் பயிற்றுமொழி மற்றும் ஆராய்ச்சி மொழியாக எந்தெந்த மொழிகள் இருக்கும், அவற்றை உயர்கல்வியில் பயன்படுத்துவது எவ்வாறு ஊக்குவிக்கப்படும் என்பது குறித்த குறிப்பான வரையறை எதுவுமில்லை.

**உயர்கல்வி எந்த மொழியில்?:** இது குறித்து கல்வியாளரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான பேராசிரியர் பிரபா கல்விமணி. அவர் இது தொடர்பாக பகிர்ந்து கொண்ட பார்வையைத் தொகுத்தளிக்கிறோம்: புதிய கல்விக் கொள்கையில் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி வழியாக கல்வி அல்லது உள்ளூர் மொழி வழியாக கல்வி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இயன்றால் எட்டாம் வகுப்புவரை அதே முறையை பின்பற்றலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஐந்தாம் அல்லது எட்டாம் வகுப்புக்குப் பிறகு எந்த மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்த தெளிவு இந்த அறிக்கையில் இல்லை.

**உயர் கல்வியில் தமிழ் இல்லாமல் போகுமா?:** தாய்மொழி அல்லாமல் ஆங்கிலம் வழியாகப் பயிற்றுவிக்கவே இந்த ஏற்பாடு. ஆனால் அது வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. இதற்கு பிறகு ஒரு மாணவர் தாய்மொழி, உள்ளூர் மொழி ஆகியவற்றை ஒரு மொழிப்பாடமாக பயிலலாம், ஆனால் அந்த மொழி வாயிலாக முற்றிலும் பயில முடியும் என எந்த உத்தரவாதமும் இல்லை.

தமிழகம் போன்ற மாநிலங்களில் பள்ளிக் கல்வி முடித்த பின்பு உயர்கல்வி வரை கூட தமிழ் மொழியிலேயே படிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் ஐந்தாம் அல்லது எட்டாம் வகுப்பு வரையில் மட்டுமே தாய்மொழிக் கல்வி என்று குறிப்பிடப்பட்டு இருப்பதன் மூலம் உயர்கல்வியை தாய்மொழி மூலம் அல்லது உள்ளூர் மொழி மூலம் படிப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போகலாம். வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் முதலீடு செய்யும் இதற்கு பின்னால் இருக்கும் நோக்கம் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உயர்கல்வித் துறையில் முதலீடு செய்வதுதான். இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு உயர்கல்விக்காக செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதற்கு பதிலாக வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் முதலீடு செய்வதையே இந்த புதிய கல்விக் கொள்கை ஊக்குவிக்கிறது. அவ்வாறு வெளிநாட்டவர்கள் இந்திய உயர்கல்வித் துறையில் முதலீடு செய்ய வேண்டுமென்றால் அவர்களுக்கு ஆங்கிலத்தில் மட்டுமே கற்பிக்கவே பெரும்பாலும் வாய்ப்பு இருக்கும்.

அந்த நோக்கில்தான் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே தாய்மொழிக்கல்வி ஆறு முதல் ஒன்பதாம் வகுப்புகளில் கணிதம், அறிவியல் உள்ளிட்ட பாடங்கள் தாய் மொழி மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் ஆகிய இரண்டு மொழிகளிலும் பயிற்றுவிக்கப்படும் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது.

– M. முருகம்மாள்



# மீட்சி பெறுமா காங்கிரஸ்?

ஒரு நாட்டின் எதிர்காலம் அதை ஆளும் கட்சியிடம் மட்டும் இல்லை; எதிர்க்கட்சிகளும் சேர்ந்தே அதைத் தீர்மானிக்கின்றன. இக்கட்டான ஒரு காலகட்டத்தில் நாட்டின் மூத்த கட்சியும் இன்றைய பிரதான எதிர்க்கட்சியுமான காங்கிரஸ் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளை வெறுமனே அந்தக் கட்சி சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று கருதிட முடியாது.

மக்களவைத் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகிய ராகுல் காந்தி, தன்னுடைய குடும்பத்துக்கு வெளியிலிருந்து புதிய தலைமையைத் தேர்ந்தெடுக்கக் கட்சியினரிடம் கேட்டுக்கொண்டது உள்ளபடி நல்ல விஷயம். காங்கிரஸின் சாதனைகளுக்கு எப்படி நேரு குடும்பம் முக்கியமான பங்களிப்புகளை ஆற்றியுள்ளதோ அதேபோல காங்கிரஸின் வீழ்ச்சிக்கும் அது கணிசமான பங்கை ஆற்றியுள்ளது. கட்சியைப் பின்னடைவிலிருந்து மீட்கும் முயற்சியில் குடும்பம் தோற்றுவிட்டதையே ராகுலின் முடிவு உணர்த்தியது. ஆனால், நேரு குடும்பத்துக்கு அப்பாற்பட்ட ஒரு தலைமையைக் கற்பனைசெய்யும் ஆற்றல் காங்கிரஸாரிடமிருந்து வெளிப்படவில்லை.

ராகுல் விரும்பிய மாற்றங்களுக்கு அதன் மூத்த தலைவர்கள் ஒரு தடையாக இருந்ததும் அவருடைய முடிவுக்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தது. நேரு குடும்பமே தலைமைப் பதவியில் நீடிக்க வேண்டும் என்று விரும்பியவர்கள் குறைந்தபட்சம் ராகுல் விரும்பும் மாற்றங்களை அவர் மேற்கொள்ள ஏதுவாக ‘ஒட்டுமொத்த ராஜிநாமா’ போன்ற ஒரு உத்தியையேனும் முன்வைத்து, ராகுலை மீண்டும் தலைவர் பதவி நோக்கி அழைத்திருக்கலாம். மோசமான முடிவாக

அவருடைய தாயார் சோனியாவையே தற்காலிகத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். சுழன்றடித்துப் பணியாற்றும் ஒரு தலைவரை எதிர்நோக்கியிருக்கும் கட்சியின் தேவையைப் பூர்த்திசெய்ய சோனியாவின் உடல்நிலை அனுமதிக்கவில்லை. ராகுலின் முடிவிலும் மாற்றம் இல்லை. ஆக, ஓராண்டுக்கும் மேலாக நாட்டின் பிரதான எதிர்க்கட்சியின் பல செயல்பாடுகள் முடங்கிக் கிடக்கின்றன. இத்தகு சூழலில்தான் முழு நேரமும் துடிப்பாகப் பணியாற்றும் ஒரு தலைவருக்கான தேவையை வலியுறுத்தி காங்கிரஸ் தலைவர்கள் சிலர் சோனியாவுக்குக் கடிதம் எழுதினர். கட்சி மீதான அக்கறையின் விளைவாகவே இதை அணுக வேண்டியிருக்கிறது. ஒன்று, நேரு குடும்பத்திலிருந்து ஒரு முழு நேரத் தலைவர் அல்லது நேரு குடும்பத்துக்கு அப்பாற்பட்ட ஒரு தலைவர். இந்தத் தீர்வை ஆத்மார்த்தமாக அணுகியிருக்க வேண்டும் கட்சி. ஆனால், முன்னுதாரணமற்ற இத்தகு சூழலை எவ்வளவு மோசமாகக் கையாள வேண்டுமோ அப்படியே கையாண்டிருக்கிறது காங்கிரஸ். நியாயமான கேள்விகளை எழுப்பிய கட்சி சகாக்களின் மீது காங்கிரஸ் செயற்குழு வசைகளைப் பொழிந்ததோடு, நேரு குடும்பத்தின் மீதான விசுவாசத்தையே கட்சியின் பரிபூரண நலனாகப் பிரஸ்தாபித்து ஓய்ந்திருக்கிறது.

காங்கிரஸைப் பீடித்து, அதை வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றுகொண்டிருக்கும் நோயைப் பற்றி அந்தக் கட்சியினர் மட்டுமல்ல; இந்திய ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட எவருமே கவலை கொள்வதற்கான நியாயம் இருக்கிறது என்பதை அக்கட்சியின் தலைமை உணர வேண்டும். ஒரு பெரிய மாற்றத்துக்குக் கட்சி தயாராக வேண்டும். கட்சிக்காகவும் தேசத்துக்காகவும் கடந்த காலங்களில் நேரு குடும்பம் செய்த தியாகங்களை யாரும் மறந்திட முடியாது. அதே சமயம், ஒரு குடும்பத்தின் குழப்பங்களுக்கு ஒரு பெரிய கட்சி பலியாகவும் கூடாது. கட்சியினரின் முதல் தேர்வாகவுள்ள தன்னுடைய பிள்ளைகளுக்குத் தலைமைப் பதவியில் உளபூர்வமாகவே? விருப்பம் இல்லை எனில், உடனடியாகக் குடும்பத்துக்கு வெளியிலிருந்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க சோனியா நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதுவே கட்சி மீதான நேரு குடும்பத்தின் உண்மையான அக்கறையின் வெளிப்பாடாக இன்று இருக்க முடியும்.

**– குருதேவ்**


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : makkalvisaranainews@gmail.com
Cell : 93821 33334, 93821 44446

# அன்புடன் பேசுங்கள்!



மண்ணில்
பூத்த பூக்கள்
தான் உதிரும்
நம் மனதில்
பூத்து நட்புக்கள்
என்றும் உதிர்வதில்லை...

மௌனத்தில் உள்ள வார்த்தைகளையும்
கோபத்தில் உள்ள அன்பையும்
யாரால்
உணர முடிகிறதோ
அவர்களே
நமக்கு கிடைத்த
உன்னதமான உறவு

நமக்காக வாழ்கின்றவர்கள்
நம்மிடம் எதிர்பார்ப்பது
நம் சந்தோஷத்தை மட்டுமே...

வெளிப்படுத்த தெரியாத
அன்பு கூட
பேரன்பு தானே...

பிடிக்காதவரை
நேசிக்க தொடங்கிவிட்டால்
இனி பிரிவுக்கே
இடமில்லை...

அன்புடன் பேசுங்கள்
அது உங்களை
அழகாக்கும்...

கிடைக்கும் என்பதில்
பிரச்சனை இல்லை
ஆனால் நிலைக்குமா
என்பதில்
தான் பிரச்சனை
(அன்பு)

- கவிஞர் நிவேதிதா




# ரிசர்வ் வங்கி அறிக்கை கூறும் உண்மை

மத்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை, இந்தியப் பொருளாதாரம் மேலும் மேலும் சரிவையே சந்திக்கும் என்கிறது. பொருளாதாரச் சூழல் குறித்தும் அடுத்து வரவிருப்பவை குறித்தும் அதன் கணிப்பு மோசமான சித்திரத்தையே முன்வைக்கிறது. தனிநபர் நுகர்வு பெரிதும் குறைந்திருப்பதால் கேட்பு கிட்டத்தட்ட வறண்டுபோன சூழ்நிலை உருவாகியிருக்கிறது; கரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கத்தின் கையிருப்பும் கரைந்துபோயிருக்கிறது; பெருநிறுவனங்கள் புதிய முதலீடுகளில் ஆர்வமாக இல்லை; வங்கிகளும் கடன் கொடுப்பதைப் பெரிதும் குறைத்துக்கொண்டுள்ளன. இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில், கரோனாவுக்காக அமல் படுத்தப்பட்ட முழு ஊரடங்கால் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு ஜூலை-செப்டம்பர் வரையிலான காலாண்டுக்கும் நீடிக்கும் என்று ரிசர்வ் வங்கி தனது அறிக்கையில் தெரிவிக்கிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மறுபடியும் பொது முடக்கத்தைக் கொண்டுவந்ததாலும் அல்லது பொது முடக்கத்தை மேலும் கடுமையாக்கியதாலும் அதற்கு முந்தைய இரண்டு மாதங்களில் சற்றே துளிர்விட்ட பொருளாதார நடவடிக்கைகளும் மறுபடியும் மந்தமாகிவிட்டன. பொருளாதாரச் செயல்பாடுகளில் முன்னுதாரணமற்ற வகையில் மேலும் சுணக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன என்றும் ரிசர்வ் வங்கி அறிக்கை கூறுகிறது.

மத்திய அரசு தன் வருமானத்திலிருந்து செய்யும் செலவை முதல் காலாண்டில் மூன்றில் ஒரு பங்கு அதிகரித்ததன் மூலம் ‘பெருந்தொற்றால் பாதிக்கப்படாத அளவிலான’ கேட்பை உருவாக்க முயன்றது. எனினும், வரும் மாதங்களில் மத்திய அரசு நிதியாதாரங்கள் இல்லாமல் பெரும் சிரமத்துக்குள்ளாகப் போகிறது. இதன் விளைவாக, மேலும் பொருளாதாரத் தூண்டுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடிவுகளை எடுக்கவோ மிகக் குறைவாகவே வாய்ப்புகள் இருக்கும். தனியார் முதலீடுகளை அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி பரிந்துரைக்கிறது; எஃகு, நிலக்கரி, மின்சக்தி, நிலம், ரயில்வே துறை போன்ற அரசுத் துறை நிறுவனங்களின் பண மதிப்புடைய சொத்துகளை விற்பதன் மூலம் நிதி திரட்டி ஊக்குவிப்புகளுக்குச் செலவிடலாம் என்று ரிசர்வ் வங்கி பரிந்துரைத்துள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்கள் அதிக அளவில் வாராக் கடனில் சிக்கிக்கொண்டுள்ளன; அவை அரசு அளிக்கக் கூடிய நிறுவன வரிச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ள ஆர்வமாக இருக்கின்றன; கேட்பு வலுவாக இல்லாததால் முதலீட்டுச் செலவுகளை அதிகப்படுத்த அவை விரும்பவில்லை. ஆகவே, அரசுத் துறை நிறுவனப் பங்குகளை விற்பதால் பெரிய அளவில் அரசுக்கு வருமானம் கிடைக்கப்போவதில்லை. எனவே, அரசு தன்னிடமுள்ள குறைவான நிதியாதாரங்களை மிகுந்த கவனத்துடன் ஒன்றுதிரட்டுவதிலேயே தீவிரமாக இருக்கும் என்று தெரிகிறது. கரோனா நோய்த் தொற்று வேகம் குறைந்த பிறகே பொருளாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அதிகப்படுத்தும் என்று தெரிகிறது. அப்படி நடப்பதற்கான சாத்தியம் கண்ணுக்கெட்டும் தொலைவு வரை அண்மையில் தெரியவில்லை.

– S. சரவணன்

# கொரோனாவுக்காக
# "2000 MINI CLINIC"




சாதாரண காய்ச்சல் மற்றும் இதர நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், தமிழகம் முழுவதும் 2,000 மினி கிளினிக் ஏற்படுத்தப்படும் என்று முதல்வர் பழனிசாமி தெரிவித்தார். தமிழகத்தில் கரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாக முதல்வர்பழனிசாமி தலைமையில் சுகாதாரத் துறையினருடன் ஆலோசனை நடத்தப்பட்டது. தலைமைச் செயலகத்தில் நடந்த இக்கூட்டத்தில் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர், ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலர் கே.சண்முகம் மற்றும் பல்வேறு துறைகளின் செயலர்கள், மருத்துவ நிபுணர்கள் பங்கேற்றனர். இதில் முதல்வர் பேசியதாவது:

**மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து அனைத்து துறை செயலாளர்கள், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தினார்.**

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு கடந்த 5 மாதங்களில், உயர் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக நோய் பரவல் கட்டுக்குள் உள்ளது. ஒரு நாளுக்கு சுமார் 85 ஆயிரம் பரிசோதனைகள் வரை மேற்கொண்டதால், வைரஸ் பரவல் குறைக்கப்பட்டுள்ளது. அதிக அளவில் பரிசோதனைகள் நடத்தப்பட்டு, தொற்று அறிகுறி உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. பல்வேறு மாவட்டங்களிலும் சுகாதாரத் துறையால் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் காய்ச்சல்முகாம்கள்

நடத்தி, ஆயிரக்கணக்கானோர் பரிசோதிக்கப்பட்டு, அறிகுறி தென்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. சென்னையில் மாநகராட்சி அலுவலர்கள் வீடு வீடாக சென்று, காய்ச்சல் மற்றும் வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்ததாலும் நோய் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. தற்போது ஒருசில துறைகள் தவிர்த்து, எல்லாவற்றுக்கும் தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. முன்பு இ-பாஸ் நடைமுறை இருந்ததால் மக்கள் எங்கு செல்கிறார்கள் என்று தெளிவாக தெரிந்தது. இப்போது தங்குதடையின்றி அனைத்து இடங்களுக்கும் சென்றுவரக்கூடிய சூழல் இருப்பதால், நோய் பரவலை கண்டுபிடிக்க முடியாத நிலை உள்ளது. எனவே, மக்கள் அதிக கவனத்துடன் இருக்கவேண்டும். அனைத்து துறை அதிகாரிகளும் ஒன்றாக இணைந்து பணியாற்றி, நோய் பரவலை குறைக்க வேண்டும். தற்போது கரோனா குறித்த சந்தேகம் இருப்பதால், பொதுமக்களுக்கு வழக்கமாக ஏற்படும் சாதாரண காய்ச்சல் மற்றும் இதர நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், தமிழகம் முழுவதும் 2,000 மினி கிளினிக் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இதில், மாநகராட்சி, நகராட்சி, பெரிய கிராமங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்கள் அடங்கும். அங்கு தேவையான மருத்துவ உபகரணங்கள், மருந்துகளுடன் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் இடம்பெறுவர். காய்ச்சல், தலைவலி போன்ற சாதாரண நோய்களுக்கு அங்கு மருந்துகள் வழங்கப்படும். ஊரடங்கு தளர்த்தப்பட்டதால் இறைச்சி, மீன் கடைகளில் மக்கள் ஞாயிற்றுக்கிழமை கூடுவதை தவிர்க்க வேண்டும். சென்னை காசிமேடு பகுதியில் மக்களுக்கு மீன்வளம், காவல், உள்ளாட்சித் துறையினர் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மெரினா



கடற்கரையில் மக்கள் கூடாமல் இருப்பதை காவல்துறை உறுதிசெய்ய வேண்டும். அனைவரும் கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும். முகக் கவசம்அணியாதவர்களுக்கு அபராதம் விதிக்க காவல், சுகாதாரம், உள்ளாட்சி துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் முடிந்த அளவுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மக்களை முகக் கவசம் அணியச் செய்ய வேண்டும். கரோனா தொற்று ஏற்பட்டு, அரசு, தனியார் மருத்துவமனைகளுக்கு வருபவர்களை உடனடியாக சிகிச்சைக்கு அனுமதிக்க வேண்டும்.

மழைக் காலம் தொடங்கியுள்ளதால், கரோனாவுடன், டெங்கு வருவதற்கும் வாய்ப்பு உள்ளது. காய்ச்சல் என்பது கரோனா அறிகுறியாக உள்ள நிலையில், டெங்குவும் வந்தால் பெரும் பிரச்சினையாகிவிடும். எனவே, உள்ளாட்சித் துறை கவனமாக இருக்க வேண்டும். அனைத்து உள்ளாட்சி நிர்வாகங்களும் ஆங்காங்கே தேங்கியிருக்கும் தண்ணீரை அப்புறப்படுத்த வேண்டும். தொழிற்சாலைகள் 100 சதவீதம் திறக்கப்பட்டுள்ள நிலையில், தொழிலாளர்களை தெர்மல் ஸ்கேனர் மூலம் பரிசோதனை செய்கின்றனரா, அனைவரும் முகக் கவசம் அணிகின்றனரா, சமூக இடைவெளி பின்பற்றப்படுகிறதா, கழிப்பறை சுத்தமாக இருக்கிறதா என்று சம்பந்தப்பட்ட துறையினர் ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு முதல்வர் கூறினார்.

**- ஆசிரியர்**

# மாடித் தோட்டமும் கொரோனாவும்

கொரோனா தொற்று பரவிக் கொண்டே இருக்கும் இன்றைய நிலையில், அத்தியாவசிய உணவுப் பொருட்களான காய்கறிகள், கீரை வகைகள் மற்றும் பழங்களை வாங்குவதற்காக அச்சத்துடன் வீட்டை விட்டு வெளியே செல்கிறோம். இந்த கொரோனாவின் அச்சத்தைத் தவிர்க்க, சத்தான தரம் வாய்ந்த உணவுப் பொருட்களை வீட்டிலே விளைவிப்பதே சிறந்தது மற்றும் பாதுகாப்பானது ஆகும். கிராமங்களில் வயல்வெளி, வீட்டுத் தோட்டம் போன்ற வாய்ப்புகள் உள்ளன. ஆனால் நகரங்களிலோ இட நெருக்கடியால் மாடித் தோட்டமே சிறந்த முறையாகும்.

மாடித் தோட்டப் பயிர்களை குறைந்த அளவில் எந்த பருவத்திலும் வளர்க்கலாம். எனினும் காய்கறிகளுக்கு ஜூன் - ஜூலை மற்றும் டிசம்பர் - ஜனவரி பருவங்களே சிறந்தவை. கீரைகளை ஆண்டு முழுவதுவும் குளிர் பருவ காய்கறிகளான கேரட், பீன்ஸ், பீட்ரூட் போன்றவற்றை அக்டோபர் - ஜனவரி மாதங்களிலும் வளர்க்கலாம். பயிருக்கு ஏற்ற வளர்ப்புத் தொட்டிகளை அல்லது பைகளை தேர்வு செய்ய வேண்டும். பெரும்பாலும் காய்கறிகளை 10 - 20 லிட்டர் பைகளிலும் கொடி வகை காய்கறிகளை 30 - 40 லிட்டர் பைகளிலும் மற்றும் மர வகைகளை 100 - 200 லிட்டர் பைகளிலும் வளர்க்கவும். பைகளில் வளர் ஊடகமாக 1:1 விகித நிலையில் மண்புழு உரம்





மற்றும் தென்னை நார்க் கழிவை பயன்படுத்துவதே சிறந்தது. இது எடை குறைவு மற்றும் நீண்ட நாட்கள் ஈரத்தை தாங்கும் தன்மை உடையது. அதனுடன் உயிரி இடுபொருட்களைச் சேர்த்துக் கொள்வதால் வளர் ஊடகம் மூலம் பரவும் நோய்கள் தடுக்கப் படுகிறது. பைகள் அல்லது வளர்ப்புத் தொட்டிகளிள் வடிகால் துளைகள் இட்டு அடியில் ஒரு அடுக்கு மணலும் அதன் மேல் வளர் ஊடகத்தை கொண்டு நிரப்பிக் கொள்ளவும்.

விதைப்பில் தக்காளி, மிளகாய், கத்தரி, காலிஃப்ளவர், முட்டைக் கோஸ், கேப்சிகம் போன்றவை நாற்று நடவுப் பயிர்கள், மற்ற காய்கறிகள் பெரும்பாலும் நேரடி விதைப்பு பயிர்கள். நாற்று நடவுப் பயிர்களுக்கு குழித்தட்டு நாற்றங்கால் கொண்டு நாற்று உற்பத்தி செய்து 25-30 நாள் நாற்றை வளர்ப்புப் பைக்கு மாற்றவும். நேரடி விதைப்பு பயிர் விதைகளை பைகளில் 1-2 அங்குல ஆழத்தில் போட்டு வளர் ஊடகம் கொண்டு மூடவும். பின்னர் பூவாளியைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் கொடுக்கவும். மேலும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தரக் கூடிய துளசி, தூதுவளை, கற்பூரவள்ளி, இன்சுலின் செடி, சோற்றுக் காற்றாலை போன்ற மருத்துவச் செடிகளை வீட்டில் வளர்க்கலாம்.

நோய்களை இயற்கை முறையில் கட்டுப்படுத்த நீரில் லிட்டருக்கு 3 கிராம் ட்ரைக்கோடெர்மா மற்றும் சூடோமோனாஸ்



கலந்து தெளிப்பதன் மூலம் வேர் அழுகல் போன்ற பல நோய்களைத் தவிர்க்கலாம். பூச்சிகளை விரட்ட வாரம் ஒரு முறை ஒரு லிட்டர் நீருக்கு 2 மில்லி வீதம் வேப்ப எண்ணெய் கலந்து தெளிக்கவும். இஞ்சி, பூண்டு மற்றும் பச்சை மிளகாய் முறையே 25 கிராம் எடுத்து அரைத்து அந்த சாற்றை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதால் பூச்சிகளை இயற்கை முறையில் கட்டுப் படுத்தலாம். தாவரங்களின் எண்ணிக்கை குறைவு என்பதால் புழுக்களை எளிதில் சேகரித்து அளித்து விடலாம். வீட்டுப் பயன்பாட்டிற்கு என்பதால் பெரும்பாலும் இரசாயண உரம் மற்றும் மருந்துகளை தவிர்த்து இயற்கை முறையையே பின்பற்றவும். மாடித் தோட்டத்தில் கொரோனாவால் பாதிக்கப் பட்டவர்களைத் தனிமைப்படுத்துவதை போலவே பூச்சி மற்றும் நோயினால் பாதிக்கப்பட்ட பைகளைத் தனிமைப் படுத்தி மற்றப் பயிர்களுக்கு பரவாமல் பாதுகாக்காலம். இவ்வாறு தனிமைப் படுத்துவதன் மூலம் கொரோனாவில் மட்டுமின்றி மாடித் தோட்டத்திலும் நோய் பரவுவதைத் தடுத்து வெற்றி காணுவதோடு நம் வீட்டுக்கு தேவையான காய்கறிகள் மற்றும் பழங்களை நாமே உற்பத்தி செய்து தன் நிறைவு அடைவதோடு வீட்டுச் செலவையும் வெகுவாக குறைக்கலாம். மேலும் வீட்டில் இருக்கும் நேரத்தை பயனுள்ள வகையில் பொழுது போக்குவதோடு மட்டுமல்லாமல் உடல் ஆரோக்கியம் மற்றும் மன மகிழ்ச்சியையும் பெறலாம்.

– S. மோகன்

---


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும் துடிப்பான, உண்மையை வெளிக்கொணர சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

# மக்கள் விசாரணை ✳ அருணை முரசு

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

நாடு முழுவதும் அக்டோபர் 4-ம் தேதி நடக்கும் யூபிஎஸ்சி முதல்நிலைத் தேர்வுக்கு வரும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து யூபிஎஸ்சி விரிவான விளக்கம் அளித்துள்ளது.

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ் உள்ளிட்ட உயர் பதவிகளுக்கு மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யூபிஎஸ்சி) சார்பில் ஆண்டுதோறும் சிவில் சர்வீஸ் தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வுகள் முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்காணல் என மொத்தம் 3 கட்டங்களாக நடக்கும்.

இதில் அக்டோபர் 4-ம் தேதி சிவில் சர்வீஸ் பணிக்கான முதல்நிலைத் தேர்வு நாடு முழுவதும் நடைபெற உள்ளது. கடந்த மே மாதம் 31-ம் தேதி நடக்க வேண்டிய தேர்வு, கரோனா வைரஸ் பரவலால் ஒத்தி வைக்கப்பட்டது.

கரோனா வைரஸ் பரவல் காலத்தில் தேர்வுகள் நடைபெறுவதால், தேர்வு எழுத வருவோர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து யூபிஎஸ்சி இன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதில் கூறியுள்ளதாவது

தேர்வுக்கு வருவோர் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். முகக்கவசம் இல்லாமல் தேர்வு எழுந்த வந்தால் தேர்வு மையத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.




தேர்வு எழுத வருவோர் அனைவரும் சொந்தமாக சானிடைசர் கொண்டுவர வேண்டும். சானிடைசர் எடுத்துவரும் பாட்டிலில், எந்தவிதமான எழுத்தும் இல்லாமல் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும்.

தேர்வு எழுத வருபவர்கள் அனைவரும் கரோனா தடுப்பு விதிகளான சமூக விலகலைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். அதுமட்டுமல்லாமல் சுய சுத்தத்தை தேர்வு அறைக்குள்ளும், வளாகத்திலும் கடைப்பிடிக்க வேண்டும்.

தேர்வு எழுத வருவோருக்காக மின்னணு அனுமதிக் கடிதம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதள முகவரியில் http://upsconline.nic.in கடிதத்தைப் பதவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்துக்கொள்ள வேண்டும்.


சிவில் சர்வீஸ் தேர்வின் இறுதி முடிவுகள் வரும்வரை மின்னணு அனுமதிக் கடிதத்தைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். இந்தத் தேர்வுக்கு யாருக்கும் கடிதம் மூலம் அனுமதிக் கடிதம் அனுப்பப்படாது.

தேர்வு எழுத வரும்போது, தேர்வாளர்கள் அனைவரும் தங்களின் மின்னணு அனுமதிக் கடிதத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். மேலும், தேர்வு எழுத வருவோர் தங்களின் இ-அட்மிட் கார்டில் புகைப்படம் ஒட்டி எடுத்து வர வேண்டும்.

தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பே தேர்வு மையங்கள் மூடப்படும் என்பதால் அனைத்துத் தேர்வாளர்களும் முன்கூட்டியே தேர்வு மையத்துக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அதாவது, 9.20 மணிக்கு முதல் கட்டத் தேர்வும், பிற்பகல் 2.20 மணிக்கு 2-ம் கட்டத் தேர்வும் நடக்கும். தேர்வு மையத்தின்

# குறித்து யூபிஎஸ்சி விரிவான விளக்கம்




கதவுகள் மூடப்பட்டபின் தேர்வு எழுத வருவோர் எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தேர்வு எழுத வருவோர் அனைவரும் கறுப்புநிற பால் பாயின்ட் பேனா எடுத்துவர அறிவுறுத்தப்படுகிறார்கள். கேள்விக்குப் பதில் அளிக்கும் ஓஎம்ஆர் ஷீட்டில் குறிக்கவும், வருகைப் பதிவேட்டுக்கும் கறுப்பு பால்பாயின்ட் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

தேர்வு மையத்துக்குள் வழக்கமான சாதாரண கைக்கடிகாரம் அணிந்து வர அனுமதி உண்டு.

கைக்கடிகாரத்தில் ஏதேனும் புதுவிதமான கருவிகள், கூடுதல் தகவல் தொடர்பு வசதிகள் இருக்கும், ஸ்மார்ட் வாட்ச் போன்றவற்றை அணிந்துவரக் கூடாது. அவ்வாறு அணிந்து வந்தால், தேர்வு எழுதும் அறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மொபைல் போன், பேஜர், உள்ளிட்ட எந்த மின்னணு சாதனங்கள் கொண்டுவந்தாலும், தேர்வு தொடங்கும் முன் அதை ஸ்விட்ச் ஆஃப் செய்து விட வேண்டும்.

தகவல்களைச் சேமித்து வைக்கும் பென்டிரைவ், ஸ்மார்ட் வாட்ச், கேமரா, ப்ளூடூத் சாதனங்கள், கால்குலேட்டர் போன்றவை அனைத்தும் ஸ்விட்ச் ஆஃப் செய்து விட வேண்டும். இதைத் தேர்வு அறைக்குள் கொண்டுவந்தால் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இந்த விதிமுறைகளை மீறி நடக்கும் தேர்வு எழுத வருவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, எதிர்காலத்தில் தேர்வு எழுதத் தடை விதிக்கப்படுவார்கள். விலை மதிப்புள்ள பொருட்கள், பைகள் போன்றவையும் தேர்வு மையத்துக்குள் அனுமதிக்கப்படாது.

இவ்வாறு யூபிஎஸ்சி தெரிவித்துள்ளது.

– M. தரணி

# பாரதியோடு என்னை ஒப்பிடாதீர்கள்!




பாரதியோடு என்னை ஒப்பிடும் போது எனக்கே மிகவும் வெட்கமாக இருக்கும். என் பாடல்களில் அவசரத்திற்காக எழுதப்பட்ட செயற்கைப் பாடல்களும் உண்டு. பாரதி முழுக்க முழுக்கத் தன்னுணர்வுக் கவிஞன்.

இப்படி மனம் திறந்து பாரதியை பாராட்டியவர் கண்ணதாசன். இதோ... இன்னும் கூட பாரதி பற்றி கண்ணதாசன்... "இன்று என் பாடல்களை நான்கு கோடி மக்கள் இரசிக்கிறார்கள்; பாடுகிறார்கள். அதைக் கண்ணால் பார்க்கும்போதும், காதால் கேட்கும்போதும் எனக்கு உற்சாகம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதனால் மேலும் மேலும் நான் எழுதுகிறேன். அந்த வாய்ப்பே இல்லாமற் போனவன் பாரதி. தன் கவிதையை யார் இரசிக்கிறார்கள் என்று தெரியாமலேயே அவன் பாடினான்...

"காலம் எப்படி வரவேற்கும்; யார் எப்படி இரசிப்பார்கள்?" என்பது தெரியாமலேயே தனக்குத் தோன்றியதை எல்லாம் பாடினான். அதனால் எந்தக் கவிதையைப் பாடினாலும் தேன் வந்து பாய்கிறது காதுகளில்.

பாரதி ஒரு ஜாதிக்கு, ஒரு மதத்துக்கு உரியவனல்ல; அவன் சர்வ சமரசவாதி. அவன் வங்காளத்தில் பிறந்திருந்தால் நோபல் பரிசு தாகூருக்குப் போயிருக்காது.

**துர்பாக்கியம் பிடித்த தமிழகமே!**
**பாரதியைக் கொண்டாடு!**
**அதன் மூலம் பாரதத்தை நீ**
**கொண்டாடுகிறாய்,**
**தேச பக்தியைக் கொண்டாடுகிறாய்,**
**தெய்வ பக்தியைக் கொண்டாடுகிறாய்,**
**தமிழ் மொழியைக் கொண்டாடுகிறாய்,**
**பாரதியைக் கொண்டாடாதவனுக்குத்**
**தமிழன் என்று சொல்லிக் கொள்ள**
**அருகதை இல்லை.**

**- அகிலாண்டேஸ்வரி**

# தமிழக கோவில்களின் சிறப்புகள்!

தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாடு, வாழ்கை முறை ஆகியவற்றை தமிழகக் கோயில்களில் தொடர்ந்து பிரதிபலித்து வந்திருக்கின்றன. தமிழில் சங்க காலப் பாடல்களிலேயே கோயில்களைப் பற்றிய குறிப்புகள் உண்டு.

**"நூலறி புலவர் நுண்ணிதில் கயிறிட்டுத்**
**தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்**
**பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"**

என நெடுநல் வாடையில் கோவில் குறித்து குறிப்பிடப்படுகிறது. தமிழ்நாட்டில் பல்லவ மன்னனான மகேந்திர வர்ம பல்லவனின் காலத்திற்குப் பின்பு கட்டப்பட்ட கோவில்களே தற்போது கிடைக்கின்றன என்றாலும் அவரது காலத்திற்கு முன்பும் கோயில்கள் உண்டு. அவை அழியக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டதால் காலத்தால் அழிந்து போயின. மகேந்திரவர்மப் பல்லவனின் காலத்தில்தான் கருங்கற்களைக் குடைந்து கோவில்களை அமைப்பது துவங்கியது. மகேந்திரவர்மன் இம்மாதிரி குகைக்கோவில் களைத் தவிர பிற கோவில்களை அமைத்திருந்தாலும் அவை பிற்காலத்தில் அழிந்துபோயின. அவன் அமைத்த குடவரைக் கோயில்கள் மட்டுமே எஞ்சி நின்றன.

மகேந்திரவர்ம பல்லவன் மட்டுமல்லாது அவனுக்குப் பின்னால் வந்த பல மன்னர்களும் குடவரைக் கோயில்களை உருவாக்கினர். தமிழ்நாட்டில் இதுபோல 45க்கும் மேற்பட்ட குடைவரைக் கோயில்கள் இப்போதும் உள்ளன. மகேந்திரவர்மப் பல்லவனைப் பொருத்தவரை அவனுடைய கோயில்களில் விமானங்கள் போன்றவை கிடையாது. அவனுடைய மகனான நரசிம்மவர்மனே கருவறை, முன் மண்டபம், விமானம் ஆகியவற்றுடன் கூடிய குடைவரைக் கோயில்களை உருவாக்க ஆரம்பித்தான். இதற்குப் பிறகு ராஜசிம்மன் காலத்தில்தான் கற்களை ஒன்றின் மீது ஒன்றாக அமைத்து கட்டும் 'கற்றளி' என்ற வகையிலான கோவில்கள் தமிழகத்தில் கட்டப்பட ஆரம்பித்தன.

இந்திய கோயில்களில் தமிழ்நாட்டு கோயில்களை வேறுபடுத்திக் காட்டுபவைகளில் மிகவும் முக்கியமானவை அதன் கோபுரங்கள். கோபுரங்களைப் பொருத்தவரை, ஊரில் எங்கிருந்து பார்த்தாலும் கோயில் தெரிய வேண்டும் என்பதற்காக உயரமாகக் கட்டப்பட்டன. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் கட்டப்பட்ட கோயில்களில் கோபுரங்கள் உயரமானவையாக அமைக்கப்படவில்லை. மாறாக, கர்ப்பகிரகங்களுக்கு மேல் அமைக்கப்படும் விமானங்கள்தான் உயரமாக அமைக்கப்பட்டன. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கை கொண்ட சோழபுரம் போன்றவற்றில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருப்பவை கோபுரங்கள் அல்ல; விமானங்கள்தான். பிற்கால பாண்டியர்களின் ஆட்சிக்காலத்தில்தான் விமானங் களை உயரமாக அமைப்பது குறைந்து கோபுரங்களை உயரமாக கட்டி எழுப்புவது துவங்கியது. இதற்குக் காரணம் இருக்கிறது. மூலவர் அமைந்துள்ள கருவறையைக் கட்டி, அதற்கு மேல் விமானமும் அமைக்கப்பட்டுவிட்டால், அதில் மாற்றங்கள் ஏதும் செய்ய முடியாது. ஆகவே பின்னால் வந்த அரசர்கள், மூலவரின் சன்னிதியைச் சுற்றி பிரகாரங்களைக் கட்டி, அவற்றில் கோபுரங்களைக் கட்ட ஆரம்பித்தார்கள். அப்படித்தான் கோபுரங்களை பெரிதாக கட்டும் பழக்கம் உருவானது.



தமிழ்நாட்டில் திருவரங்கம், மீனாட்சியம்மன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களில் பல கோபுரங்கள் உண்டு. இருக்கும் கோபுரத்திலேயே பெரிய கோபுரம் ராஜகோபுரம் என்று அழைக்கப்படுகிறது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய கோபுரமாக அமைந்திருப்பது திருவரங்கத்தின் ராஜகோபுரம்தான். 13 நிலைகளுடன் அமைக்கப்பட்ட இந்தக் கோபுரம், தமிழ் கோபுரக் கட்டுமானக் கலையின் உச்சத்தைக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் இருப்பதிலேயே பழமையான கோபுரம் காஞ் சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் கோபுரம். ஒரே ஒரு நிலையைக் கொண்ட மிகச் சிறிய கோபுரம் இது. பல்லவர் காலத்தில் துவக்கம் பெற்ற கோயில் கலை, சோழர் காலத்தில் அதன் உச்சத்தை அடைந்தது. பிற்காலப் பாண்டியர்களின் காலத்தில் கோபுரங்கள் அமைக்கப்பட்டு இந்தக் கோயில்கள் கம்பீரத் தோற்றத்தைப் பெற்றன.


இதற்குப் பின்வந்த நாயக்க மன்னர்களின் காலத்தில் கோயில்கள் அளவில் பெரிதாக விரிவடையத் துவங்கின. ஏற்கனவே உள்ள பழைய கோயில்களில் புதிய திருச்சுற்றுகள் சேர்க்கப்பட்டன. புதிய மண்டபங்கள் கட்டப்பட்டன. பிறகு, இவற்றை உள்ளடக்கி புதிய மதில் சுவர்கள் கட்டப்பட்டு கோயில் விரிவாக்கப்பட்டது. இதற்குப் பிறகு தமிழ்நாட்டில் கோயில் கலையில் பெரிய வளர்ச்சி ஏதும் இல்லை. பல்லவர் காலத்தில் துவங்கிய கோவில் கலை இப்படியாக நாயக்கர் காலத்தில் ஒரு தேக்கத்தை வந்தடைந்தது. ஆனால், தமிழ்நாட்டில் கோயில்கள் என்பவை வெறும் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல; அவை அந்தந்த பகுதிகளின் கலைக்கூடங்கள். பண்பாட்டுச் சின்னங்கள். அப்பகுதி மக்களின் மனநிலையை ஒருங்கிணைக்கும் தொன்மங்கள்.

**– குருதேவ்**

# 5 வரிகளில் 5 கதைகள்



ஒரு கிராமத்தில் மழை வேண்டி கிராம மக்கள் எல்லாம் சேர்ந்து இறைவனை வேண்டினார்கள். அதில் ஒருவன் மட்டும் குடையை எடுத்து வந்தான் அதற்குப் பெயர்தான் FAITH.



குழந்தையை மேலே தூக்கிப் போட்டு விளையாடினார் ஒரு தந்தை, ஆனால் அதற்கு பயப்படாமல் அவரைப் பார்த்து குழந்தை சிரித்தது அதற்குப் பெயர்தான் TRUST.



ஒவ்வொரு நாள் இரவும் அலாரம் வைத்துவிட்டு படுக்கப் போகிறோம் நாம் நாளை உயிரோடு இருப்போம் என்பதற்கு எந்த வித உத்திரவாதமும் இல்லாமல் அதற்குப் பெயர்தான் HOPE.




நடப்பது எதுவும் நம் கையில் இல்லை என்று தெரிந்தும் எதிர்கால திட்டம் போடுகிறோம். அதற்குப் பெயர்தான் CONFIDENCE.



உலகமே கஷ்டப்படுவதை நாம் தினமும் பார்த்து வந்தும் அது போல நமக்கும் கஷ்டம் ஏற்படும் என்று அறிந்த போதிலும் நாம் திருமணம் செய்து கொள்கிறேன் அதற்குப் பெயர்தான் OVER CONFIDENCE.

- M. நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.



AYUSHMAN BHARAT
NATIONAL HEALTH PROTECTION MISSION
COVERAGE UP TO
5 LAKH RUPEES PER FAMILY PER YEAR
OVER 10 CRORE POOR & VULNERABLE FAMILIES COVERED
BENEFICIARIES OF AROUND
50 CRORE INDIANS
BIMAR NAHI RAHA LACHAAR,
HO RAHA MUFT UPCHAAR
World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.
For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.
Benefits to over 10 crore poor and vulnerable families and more than 50 crore beneficiaries across the country
Annual healthcare benefits of up to Rs. 5 Lakh for every entitled family
Access to healthcare services in all government and empanelled private hospitals
Toll-Free helpline number
14555/1800111565
www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Posted at EGMORE RMS / 1 (Patrika Channel). **SEPTEMBER - 2020**
RNI No.: **TNTAM44870/2012**. Registered No.: **TN/CC(S)DN/461/19-21**, Posted Date of Publication 15th of Every Month

